Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

# தினமுரசு

தினப்பதிப்பு

THINAMURASU

யாழ் மக்களுக்காக... யாழ் மண்ணில்...




C/348

SPICE TRAVELS & TOURS (PVT) LTD®

IATA

412, First Floor, Hospital Road, Jaffna.
(Adjoining Sangeetha Mobile Links)

Fly Line
Keethan - 0773 916 416
Tharshy - 0773 915 530

முரசு – 01 | திருவள்ளுவர் ஆண்டு 2041 | தை 04 | செவ்வாய்க்கிழமை | (18.01.2011) | பக்கங்கள் 12 | ஓசை – 110

## ஜனாதிபதியினதும் எங்களினதும் இணைந்த கரங்கள்தான் இங்கு எதையும் சாதிக்கும்

### அமைச்சர் டக்ளஸ் தேசியப் பொங்கல் விழாவில் பேச்சு



(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களினதும் எங்களினதும் இணைந்த கரங்கள் மட்டும்தான் இங்கு எதையும் சாதிக்கும், அது அபிவிருத்தியாக இருந்தால் என்ன, வாழ்வாதார வசதிகளாக இருந்தால் என்ன, அரசியலுரிமை பிரச்சினையாக இருந்தால் என்ன, அனைத்தும் எங்களது இணைந்த கரங்களால் மட்டுமே நடத்தி முடிக்கப்படும்.

ஜனாதிபதி அவர்களின் நேசக்கரங்களை பற்றிப்பிடித்து பெறவேண்டிய அனைத்தையும் பெற்றுக்கொள்ள நீங்கள் அனைவரும் மாபெரும் சக்தியாக எழுந்து வரவேண்டும் என்று நான் வேண்டுகோள் விடுக்கின்றேன்.


இவ்வாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

நேற்றைய தேசியப் பொங்கல் விழாவில் கலந்துகொண்டு

(11 ஆம் பக்கம் பார்க்க)

# குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக மக்களை இனரீதியாக பிரிக்கவேண்டாம்

### யாழ். தேசியப் பொங்கல் விழாவில் ஜனாதிபதி கோரிக்கை





(யாழ்ப்பாணம்)

**குறுகிய அரசியல் இலாபங்களுக்காக இந்த நாட்டின் மக்களை இன, மத அடிப்படையில் பிரித்து குரோதங்களை வளர்ப்பதற்கு எவரையும் நாம் அனுமதிக்க மாட்டோம். இனரீதியான, மதரீதியான, பேதங்களைக் கடந்து நாம் அனைவரும் ஒரே தேசியக் கொடியின் கீழ் ஒன்றிணைவோம் என்று அனைவருக்கும் அழைப்பு விடுத்தார் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ.**

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு அரங்கில் நேற்றுக் காலை நடைபெற்ற பொங்கல் விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு பேசும்போதே அவர் மேற்கண்டவாறு அழைப்பு விடுத்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. மனித உரிமை விவகார செயலாளர் நாளை இலங்கைக்கு விஜயம் செய்கிறார்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை விவகாரங்களுக்கான பிரதி செயலாளரும் அவசரகால நிவாரண நடவடிக்கைகளுக்கான பிரதி இணைப்பாளருமான கதரின் பிராக் நாளை இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

மூன்றுநாள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு கொழும்புக்கு வருகைதரும் இவர் அண்மையில் இடம்பெற்ற இயற்கை அனர்த்தம் காரணமாக ஏற்பட்ட பாதிப்புக்களை மதிப்பீடு செய்யவிருக்கிறார்.

இவர் எதிர்வரும் 21 ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருப்பாரென ஐக்கிய நாடுகள் அலுவலகம் தெரிவித்தது.

இலங்கையில் தேவைப்படும் மனித உரிமை நடவடிக்கைகளுக்கும் பலவீனமான மக்களுக்கு ஐ.நா.வின் உதவிப் பொருட்களை வழங்குவதற்கும் கதரின் (12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழில் உரையாற்ற அனுமதி கேட்டார் ஜனாதிபதி

(யாழ்ப்பாணம்)

எனக்கு கொஞ்சம் தமிழ் தெரியும். அதை நான் அடிக்கடி பேசாவிட்டால் மறந்துவிடுவேன். நீங்கள் சிரிக்காது இருப்பீர்களானால் நான் பேசுகிறேன். இதற்கு உங்கள் சம்மதம் எனக்கு வேண்டும் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தமிழில் சுவாரசியமாகக் கேட்டபோது வானதிர எழுந்த கரகோஷத்தின் மத்தியில் ஆம் பேசுங்கள் என்று மக்கள் சம்மதம் தெரிவித்த பின்னர் அவர் தமிழில் பேசினார்.

## கொலையாளியின் இலக்கு யார்? குடும்பப் பெண் மீது துப்பாக்கிச்சூடு

### மானிப்பாயில் பரபரப்புச் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மானிப்பாயை சேர்ந்த பெண்ணொருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காலில் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவில் நேற்று திங்கட்கிழமை இரவு 8.20 மணியளவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ். மானிப்பாய் ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த குடும்பப் பெண்மணியான 31 வயதான ஸ்ரீபாலசுந்தரசர்மா நினோஷா என்பவரே துப்பாக்கி சூட்டுக்கு இலக்கானவராவர்.

இவர் மானிப்பாய் கியூமெடிக்காவுக்கு அருகாமையில் கணவரோடு நின்று கதைத்துக்கொண்டு நிற்கும் போது ஹீரோ கொண்டா மோட்டார் சைக்கிளில் தலைக்கவசம் அணியாமல் (12 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கையின் இராணுவ நண்பர்கள் அமெரிக்காவில் அதிகம்; அமெரிக்க ஊடகவியலாளர் வெளியிடும் திடுக்கிடும் தகவல்!

(கொழும்பு)

இலங்கைக்கு அமெரிக்காவில் குறிப்பாக அதன் இராணுவ வட்டாரத்தில் நெருங்கிய நண்பர்கள் அதிகம் உள்ளனர் என்று ஜோன் லீ எண்டர்ஸன் என்ற அமெரிக்க ஊடகவியலாளர் நியுயோர்கர் என்ற இணையத்தளத்தில் கடந்த வாரம் குறிப்பிட்டுள்ளார்.

அவர் அதில் மேலும் தெரிவித்துள்ள முக்கிய விடயங்கள் வருமாறு,

புஷ் நிர்வாகத்தில் உயர் பதவி வகித்த ஜேம்ஸ் கிளார்ட் என்பவர் இலங்கையின் மிக நெருங்கிய நண்பராக இருந்தார்.

இவர் அமெரிக்க பாதுகாப்புத் திணைக்களத்தில் இலங்கை மற்றும் இந்திய விவகாரங்களைக் கையாளுவதற்குப் பொறுப்பான பிரதி உதவிச் செயலாளராக இருந்தார்.

2009 இல் ஒபாமா நிர்வாகத்தால் இவர் பதவி மாற்றம் செய்யப்படும் வரை இந்த நிலை நீடித்தது. பென்டகனின் தேசியப் பாதுகாப்புப் பல்கலைக்கழகத்திலிருந்து அண்மையில் ஓய்வு பெற்ற ஜேம்ஸ் கிளார்ட் இந்து சமுத்திர கரையோரப் பாதுகாப்பு விவகாரங்கள் பற்றி ஆராயும் ஒரு மாநாட்டைக் கூட்டுமாறு இலங்கையின் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு ஆலோசனை வழங்கியிருந்தார்.


இந்து சமுத்திர கரையோரப் பாதுகாப்பு பற்றிய விடயத்தை ஒரு நாட்டோடு சம்பந்தப்பட்ட விடயமாக்காமல், அதிலிருந்து விடுபட்டு அதன் பாரம்பரிய நிலைக்கு கொண்டுவருமாறு அவர் கோத்தபாயவுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

கிளார்ட், கோத்தபாயவுக்கு நீண்டகாலமாக அறிமுகமானவர். (12 ஆம் பக்கம் பார்க்க)



# யாழ். மாணவர்கள் 100 பேருக்கு மடிக்கணனிகள் வழங்கினார் ஜனாதிபதி

## தேசியப் பொங்கல் விழாவில் சிறப்பு அம்சம்



(யாழ்ப்பாணம்)

கடந்த 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சையில் அதிதிறமைச் சித்தி அடிப்படையில் பல்கலைக்கழகத்துக்கு தெரிவுசெய்யப்பட்ட 100 மாணவர்களில் 10 மாணவர்களுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று மேடையில் வைத்து 10 மடிக்கணனிகளை வழங்கினார்.

ஏனைய 90 மாணவர்களுக்கும் புத்தசாசன மத விவகார அமைச்சர் எம்.கே.டி.எஸ்.குணவர்த்தன, யாழ்.மாவட்ட ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலென்டின் (உதயன்) ஆகியோர் வழங்கினர்.

யாழ்.துரையப்பா விளையாட்டு அரங்கில் நேற்று நடைபெற்ற பொங்கல் விழா நிகழ்வில் வைத்தே மடிக்கணனிகளை அவர் வழங்கினார்.

ஜனாதிபதியிடமிருந்து மடிக்கணனிகளைப் பெற்றோர் விபரம் வருமாறு,

சிவமணி சிவகுமாரன், பாலகோபாலன் கோகுலன், கோணேஸ்வரன் ஜோதிகா, யோகநாதன் ஜான், மேரிறொசாசுலக்சன் பிரேமராசா, கைலாச பிள்ளை காண்டீபன், நேருஜா லோகநாதன், சொர்ணவடிவேலு கவின், றியன் சீ.பீரிஸ், கனக லிங்கம் உமாசங்கர்.

இம்மாணவர்களுக்கு நேற்று வழங்கப்பட்ட மடிக்கணனிகள் அவர்கள் தமது கல்வியை விருத்தி செய்யும் நோக்கமாகப் பயன்படத்தவேண்டும்.

மாணவர்களின் கல்வி விருத்திக்காக மேலும் பல உதவிகளைச் செய்வதற்கு அரசு தயாராக இருக்கிறது என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

## ஆறாம் ஆண்டில் தடம் பதிக்கும் விநாயகர் ச.ச.நிலையத்தில் விழா

(ஆனைக்கோட்டை)

ஆனைக்கோட்டை விநாயகர் சனசமூக நிலையத்தின் 5ஆம் ஆண்டு நிறைவு விழா நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு விநாயகர் சனசமூக நிலைய முன்றலில் நடைபெறவுள்ளது.

க.தவராசா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி கே. சிவசோதி கலந்துகொள்ளவுள்ளார்.

சுழிபுரம் பிரதேசசபையின் உள்ளூராட்சி உதவியாளர் செ. ரமேஸ், நவாலி முதியோர் சங்க செயலாளர் எஸ்.பொன்னுத்துரை, ஓய்வுபெற்ற அதிபர் க. கதிரேசு, சனசமூக நிலைய ஸ்தாபகர் க. இராசேந்திரன் ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

இந்நிகழ்வை முன்னிட்டு அன்றையதினம் காலை 7.00 மணிக்கு மரதன் ஓட்டப்போட்டி இடம் பெறவுள்ளது. (104)

## நீர்த்தாங்கிகள் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கு யுனிசெவ் நிறுவனத்தினால் 2000 லீற்றர் கொள்ளளவுள்ள 18 பிளாஸ்ரிக் நீர்த்தாங்கிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

இந்த நீர்த்தாங்கிகள் யாழ். மாவட்டத்தில் உள்ள ஐந்து வலயங்களின் பாடசாலைகளுக்கு பிரித்து வழங்கப்படவுள்ளதாக யாழ். கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்சமயம் யாழ்.வலயத்தில் இவை வைக்கப்பட்டுள்ளதாகவும், அங்கிருந்து குறித்த பாடசாலைகளுக்கு இவை விநியோகிக்கப்பட்டு வருவதாக கல்வித்திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (பா)

## கிணற்றில் தவறி வீழ்ந்து மரணம்

(வட்டக்கச்சி)

கல்மடுநகர் - சம்புக்குளம் பகுதியில் இளம் குடும்பஸ்தர் தண்ணீர் அள்ளச் சென்ற போது கிணற்றினுள் விழுந்து மரணமாகியுள்ளார்.

கடந்த வாரம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் கிணற்றில் தண்ணீர் அள்ளச் சென்றபோது கிணறு இடிந்து விழுந்ததினால் நான்கு பிள்ளைகளின் தந்தையான அ.செந்தமிழ்ச்செல்வன் (வயது - 35) என்பவர் கிணற்றினுள் தவறி வீழ்ந்து பரிதாபகரமான முறையில் மரணமாகியுள்ளார். (45)

## தமிழினியின் விளக்கமறியல் தொடர்ந்தும் நீடிப்பு!



(கொழும்பு)

புலிகளின் முன்னாள் மகளிர் பிரிவு பொறுப்பாளர் சுப்ரமணியம் சிவகாமி எனப்படும் தமிழினியை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழினி நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டுள்ளார்.

தமிழினியை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 21ஆம் திகதி வரையில் விளக்க மறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதிவான் ரஷ்மி சிங்கப்புலி உத்தரவிட்டுள்ளார்.

விசாரணைகளை நடத்துவதற்கு போதியளவு கால அவகாசம் வழங்குமாறு பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் நீதிவானிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரின் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட நீதிவான் இந்த உத்தரவினை பிறப்பித்துள்ளார்.

## கால்கோள் விழா

(ஆனைக்கோட்டை)

நவாலி மகா வித்தியாலயத்தின் ஆரம்பப்பிரிவு தரம் 1 இற்கான கால்கோள்விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு வித்தியாலய அதிபர் இரா.வசந்தகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தநிகழ்வில், பிரதம விருந்தினராக மானிப்பாய் இந்துக் கல்லூரியின் இளைப்பாறிய உப அதிபர் செல்வி.பா.சோதிரட்ணம் கலந்துகொள்ளவுள்ளார். (104)

## இன்று தேர்த்திருவிழா

காரைநகர் - பயிரிக்கூடல் சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் தேர்த்திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு சிறப்பாக நடைபெறவுள்ளது. நாளை புதன் கிழமை காலையில் தீர்த்தத் திருவிழா இடம்பெறும்.

இவ்வாலய வருடாந்த மஹோற்சவம் தை மாதம் 10 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி கடந்த ஒன்பது நாட்களாக சிறப்பாக நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (10)

## இரண்டரை லட்சம் கால்நடைகள் பெருவெள்ளத்தில் சிக்கி அழிவு

கடந்த வாரங்களில் ஏற்பட்ட பெரு வெள்ளத்தினால் குறைந்தது 50 யானைகள் மரணமாகியிருப்பதாக வனவிலங்குகள் பாதுகாப்புத் திணைக்களம் கூறியுள்ளது.

இந்த இயற்கைப் பேரழிவினால் யானைகள் மற்றும் ஏனைய விலங்குகளுக்கு ஏற்பட்ட இழப்புக்கள் தொடர்பான சரியான விபரங்கனை திரட்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பெருவெள்ளத்தினால் லகுகல,சோமாவதி,மாதுறுஓயா,குமண, கவுடுல்ல ஆகிய வனவிலங்கு சரணாலயங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டன. அதேவேளை வீடுகளில் வளர்க்கப்படும் பெருந்தொகையான கால்நடைகளும் இந்தப் பெருவெள்ளத்தினால் மரணமாகியுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் 48,679 மாடுகள் 22279 ஆடுகள் மற்றும் 172,884 கோழிகள் இறந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. வீடுகளில் வளர்க்கப்படும் கால்நடைகளுக்கு ஏற்பட்டுள்ள பாரிய அழிவுகளால் இங்கு பொருளாதார ரீதியாக பாரிய நெருக்கடிகள் தோன்றலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## பௌர்ணமி விழா

வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் இந்த ஆண்டுக்கான முதலாவது பௌர்ணமி விழா வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்தின் சார்பில் யா/ உடுவில் மகளிர் கல்லூரியில் வட மாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அவர்களின் தலைமையில் நாளை பிற் பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக கௌரவ அமைச்சர் கே. என்.டக்ளஸ் தேவானந்தா அவர்களும், கௌரவ விருந்தினராக வட மாகாண கல்வி அமைச்சுச் செயலாளர் இ.இளங்கோவன் அவர்களும் கலந்து கொள்ளவுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ ஒன்றிணைந்து செயற்படுங்கள்!

### அரசியல்வாதிகளுக்கு அழைப்பு

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில் அரசியல்வாதிகள் ஒன்றிணைய வேண்டுமென பொது சனத் தொடர்புத்துறை அமைச்சர் மேர்வின் சில்வா வேண்டுகோள் விடுத்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாடு மிகப் பெரிய அழிவைச் சந்திக்கவில்லை, இருந்தும் இதனைச் சாட்டாக வைத்து இங்கு தலையிடும் வெளி நாடுகள் குழப்பத்தை ஏற்படுத்திவிடலாம்.

வெள்ளத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட மக்களுக்கு தேவையான உதவிகளை வழங்கும் திட்டம் ஏற்கனவே ஆரம்பமாகிவிட்டது. எனவே மாற்றுக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள், இந்த அழிவு தொடர்பான உதவிகளுக்கு உதவ முன்வர வேண்டும். அரசியல் அரங்கில் இந்தப் பேரனர்த்தத்திற்கு உதவும் வகையில், அரசியல் வேறுபாடுகள் களையப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

இதேவேளை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 350 குடும்பங்களுக்கு, உலருணவுப் பொருட்களையும், பாடசாலைப் பிள்ளைகளுக்கான சீருடைத் துணிகளையும் அமைச்சர் மேர்வின் சில்வா வழங்கினார்.

## முன்னாள் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் ௯௦ பேருக்கு கல்தா

(கொழும்பு)

முன்னாள் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் 90 பேருக்கு இந்த முறை உள்ளூராட்சி சபை தேர்தலில் வேட்பாளர்களாகப் போட்டியிட வாய்ப்பில்லை என ஐக்கிய தேசிய கட்சி தெரிவித்துள்ளது.

ஆளும் கட்சிக்கு ஆதரவளித்தமை மற்றும் சில ஒழுக்கயீனமான செயற்பாடுகளை மேற்கொண்டமை போன்ற விடயங்களே இதற்கான காரணங்களாகும்.

இவர்களுள் முன்னாள் பிரதேச சபைத் தலைவர்கள் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர்களும உள்ளடங்குவாதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கடந்த 2 உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் போட்டியிட்டு தோல்வியடைந்தவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படப் போவதில்லை எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, உள்ளூராட்சி சபைத் தேர்தலின் பின்னர் கட்சியின் புதிய பதவி பிரமாணங்கள் இடம்பெறவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க நேற்றுமுன்தினம் கண்டியில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் வைத்து தெரிவித்துள்ளார்.

இதேவேளை, எதிர்வரும் தேர்தலின் போது பெண்களுக்கும் வாய்ப்புகளை வழங்கவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி, தெரிவித்துள்ளது.

எனினும் பெண்கள் மத்தியில் இருந்து குறைவான விண்ணப்பங்களே கிடைத்துள்ளதாக கட்சி தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்ளும் கால எல்லையை நீடிப்பதா? இல்லையா? என்பது தொடர்பாக இதுவரை தீர்மானம் எடுக்கப்படவில்லை.

## யாழ். இந்து ஆலயங்களுக்கு 34 லட்சம் இது ஜனாதிபதியின் பொங்கல் விழா பரிசில்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள இந்து ஆலயங்களின் அபிவிருத்திக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பொங்கல் பரிசாக 34 லட்சம் ரூபா நிதி வழங்கியுள்ளார்.

இந்நிதி மாவட்டத்திலுள்ள 34 இந்து ஆலயங்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபா வீதம் வழங்கப்படவுள்ளது.

ஆலயங்களுக்கு வழங்கப்படவுள்ள 34 லட்சம் ரூபாவுக்குரிய காசோலையை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ யாழ். அரச அதிபர் இமெல்டா சுகுமாரிடம் மேடையில் வைத்து வழங்கினார்.

உலகில் மூன்றுவகையான மக்கள் இருக்கின்றனர். செய்ய முடியும் என்பவர், செய்யமாட்டோம் என்பவர், செய்ய இயலாது என்பவர். முதலாமவர் எல்லாவற்றையும் செய்து முடிக்கின்றனர். இரண்டாமவர் எதிர்க்கின்றனர். மூன்றாமவர் எல்லாவற்றிலும் தோல்வி அடைகின்றனர். யாரோ

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
Thinamurasu@live.com
Thinamurasupaper@hotmail.com

## திருப்புமுனை

வருண பகவானின் நல்லாசியுடன் தேசிய தைப்பொங்கல் விழா நேற்று யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் வெகுவிமரிசையாக நடந்தேறியது.

உழவர் திருநாளாம் தைத்திருநாளை தேசிய தைப்பொங்கல் விழாவாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பிரகடனப்படுத்தியது மட்டுமல்லாமல், அவ்விழாவை முதன்முறையாக யாழ்ப்பாணத்தில் நடந்த முன்வந்தமை தமிழ் மக்களின் மனங்களை வெல்வதற்கான ஒரு நடவடிக்கையாகவே கருத வேண்டியுள்ளது.

இப்பெருவிழாவை எவ்வித குறைபாடுகளுமின்றி கனகச்சிதமாக நடத்துவதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்னின்று நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்க ஒரு சம்பவ நிகழ்வாகும்.

இந்நிகழ்வில் வேதம் ஒதும் வேதியர்கள் சுலோகங்கள் மூலம் ஜனாதிபதியை வாழ்த்தியிருந்தமை முன்னெப்போதும் இடம்பெற்றிருக்காத ஒரு நிகழ்வாக அமைந்திருந்தது.

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்த பெருமையோடு யாழ்ப்பாணத்தில் இரண்டு தினங்கள் தங்கியிருந்து அபிவிருத்திப்பணிகளை ஆரம்பித்து வைத்த பெருமையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனதாக்கிக் கொண்டுள்ளார்.

அத்தோடு, இப்படியான அபிவிருத்திப்பணிகளை மேலும் தொடர்வதின் மூலமும், போரினால் பாதிக்கப்பட்டு சிதைந்து போயிருக்கும் பகுதிகளையும் புனர்நிர்மாணம் செய்வதோடு, மக்களின் அடிப்படைத்தேவைக்குரிய விடயங்களையும் நிறைவேற்றி வைப்பார் என நம்பிக்கையோடு இருப்போம்.

இந்நிலையில்,மிக நீண்ட காலமாகத்தடைப்பட்டிருந்த யாழ்ப் பாணம் - மன்னார் ஏ.32 நெடுஞ்சாலையில் உள்ள சங்குப்பிட்டிப்பாலம் நேற்று முன்தினம் ஜனாதிப தியினால் திறந்துவைக்கப்பட்டமை வரலாற்றுப் பெருமைவாய்ந்த ஒரு நிகழ்வாகும்.

இந்நிகழ்வில், அவர் தமிழ் மக்களைத் தேசத்தின் பங்காளிகளாகவும் அவர்களைப் புறம்தள்ளிவிட்டு இனப்பிரச்சினைக்கான தீர்வை முன்வைக்க மாட்டேன் என்றும், தீர்வுதொடர்பாக தமிழ் மக்களின் அரசியல் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்தி வருவதாகவும் கூறியிருப்பது, தமிழ் மக்களின் பிரச்சினையில் அவர் எவ்வளவு தூரம் அக்கறை கொண்டுள்ளார் என்பதை எடுத்துக்காட்டுவதாக உள்ளது.

இனப்பிரச்சினை தீர்வில் அவர்காட்டும் அக்கறையை உறுதிப்படுத்தும் வகையில், பொங்கல் விழாவில் திரண்டிருந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் முன்னிலையில் மேடையில் வீற்றிருந்த எதிர்க்கட்சிகளின் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களைப்பார்த்து எல்லோரும் ஒன்றுபட்டு தாய்நாட்டைக்கட்டிஎழுப்ப முன்வாருங்கள் என்று அழைப்பு விடுத்துள்ளமை சிந்தனைக்குரிய ஒரு விடயமாகும்.

ஜனாதிபதியின் இந்த அழைப்பு, தமிழ்மக்களின் மத்தியில் நம்பிக்கை ஒளியை ஏற்றுவதாக அமைந்திருந்தாலும், எதிர்க்கட்சி உறுப்பினர்களின் நிலைப்பாடு எப்படி இருக்கும் என்பதை நாடி பிடித்துத்தான் பார்க்கவேண்டும்.

எது எப்படி இருப்பினும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தேசியப் பொங்கல் விழாவில் கலந்து கொண்டு அவர் ஆற்றிய உரையின் மூலம் தமிழ் மக்கள் வாழ்வில் திருப்புமுனை ஒன்றை ஏற்படுத்தும் என எதிர்பார்ப்போம்.

-ஆசிரியர் -

# நாட்டில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தினால் 38 பேர் பலி, நான்கு பேரைக் காணவில்லை!

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள வெள்ள அனர்த்தத்தினால் 38 பேர் இறந்துள்ளதாகவும் 4 பேர் காணாமல் போயுள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பேச்சாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், வெள்ள அனர்த்தத்தினால் இதுவரை 52 பேர் காயமடைந்துள்ளனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் 18 பேரும் அம்பாறையில் 10 பேரும், கண்டியில் 8 பேரும் பதுளை மற்றும் வவுனியாவில் தலா ஒருவரும் இறந்துள்ளனர்.

இதில் மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகளவில் இறப்புக்கள் இடம்பெற்றுள்ளன.

வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென அரசாங்கம் 142 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளது. தொடர்ந்தும் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கான உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

தற்போது மழை ஓய்ந்துள்ளதனால் முகாம்களில் தங்கியுள்ள மக்கள் வீடுதிரும்பிவருகின்றனர்.

நாடுமுழுவதும் இந்த வெள்ள அனர்த்தத்தினால் 2 இலட்சத்து 86 ஆயிரத்து 997 குடும்பங்களைச் சேர்ந்த 10 இலட்சத்து 79 ஆயிரத்து 842 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

3 ஆயிரத்து 859 வீடுகள் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 19 ஆயிரத்து 368 வீடுகள் பகுதியளவில் பாதிக்கப்பட்டுள்ளன.

53 ஆயிரத்து 216 குடும்பங்களைச் சேர்ந்த 2 இலட்சத்து 4 ஆயிரத்து 118 பேர் 435 முகாம்களில் தங்கியுள்ளனர்.

இதில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 31 ஆயிரத்து 651 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 22 ஆயிரத்து 505 பேர் 241 முகாம்களில் தங்கியுள்ளனர். அத்துடன் இந்த மாவட்டத்தில் முழுமையாக 5 இலட்சத்து 40 ஆயிரத்து 144 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தில் 4 இலட்சத்து 40 ஆயிரத்து 843 பேர் பாதிக்கப்பட்டுளளனர். இதில் 14 ஆயிரத்து 863 குடும்பங்களைச் சேர்ந்த 55 ஆயிரத்து 884 பேர் 77 முகாம்களில் தங்கியுள்ளனர்.

திருகோணமலை மாவட்டத்தில் 49 முகாமிலும் பொலநறுவையில் 44 முகாம்களிலும், அனுராதபுரத்தில் 20 முகாம்களிலும் கண்டியில் 9 முகாம்களிலும் மாத்தறை, மன்னார் ஆகிய மாவட்டங்களில் 5 முகாம்களிலும், பதுளையில் 3 முகாம்களிலும், நுவரெலியா, புத்தளம் மாவட்டங்களில் தலா ஒரு முகாமிலும் மக்கள் தங்கியுள்ளனர்.

இதேவேளை கடுமையான வெள்ளம் காரணமாக பொலனறுவை மாவட்டத்தில் உடுல்ல குளத்தின் 12 வான் கதவுகளும், பராக்கிரம சமுத்திரத்தின் 10 வான் கதவுகளும், மின்னேரியாக் குளத்தின் 8 வான் கதவுகளும் திறந்துவிடப்பட்டுள்ளன.

மொனராகல மாவட்டத்தில் வெதரகர குளத்தின் 6 வான் கதவுகளும் திறந்து விடப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை வடக்கு, கிழக்கு, வடமத்தி, மத்திய மற்றும், ஊவாமாகாணம், அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் மழைப்பொழிவு இருக்கும் என வானிலை அவதான நிலையம் தெரிவித்தது.

வடக்கு, கிழக்கு மாவட்டங்களில் கடல் கொந்தளிப்பாகக் காணப்படும். இதனால் கடலுக்குச் செல்லும் மீனவர்கள் பாதுகாப்பாக இருக்குமாறு வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

## திருட்டு முயற்சியில் ஈடுபட்டவர் கிணற்றினுள் தவறி வீழ்ந்தார்

(கொக்குவில்)

களவுக்குப் போன நால்வரில் ஒருவர் இருட்டில் தவறிக் கிணற்றில் வீழ்ந்ததால் திருட்டு முயற்சி தோல்வியில் முடிவடைந்தது. கிணற்றில் வீழ்ந்தவரைக் கைவிட்டு மற்ற மூவரும் ஓடித் தப்பிவிட்டதாகக் கூறப்படுகிறது. அகப்பட்ட நபரை நையப்புடைத்த வீட்டு மற்றும் அயலவர்கள் சேர்ந்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். மேற்படி நபர் பொலிஸாரால் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினமிரவு(16 01-11) ஞாயிற்றுக்கிழமை யாழ். சுண்டுக்குளி அச்சுக்கூட வீதியில் அமைந்துள்ள நகைக்கடைக்காரர் வீட்டில் நடைபெற்றுள்ளது. சில மாதங்களுக்கு முன்பாக அவ்வீட்டில் திருட்டுச் சம்பவம் ஒன்றும் நடைபெற்றிருந்ததாகவும் தெரிய வருகிறது. (68)

## நீர்ப்பாசன அபிவிருத்திக்கு 110 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட நீர்ப்பாசனக் குளங்கள் மற்றும் கால்வாய்களை புனரமைப்பதற்கு அரசாங்கம் 110 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளதாக நீர்ப்பாசனத் திட்டமிடல் அமைச்சர் நிமல் ஸ்ரீபால டிசில்வா தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள உன்னிச்சைப் பகுதிக்கு நேற்றுமுன்தினம் விஜயம் மேற்கொண்டு அங்குள்ள நீர்ப்பாசன குளங்கள் மற்றும் கால்வாய்களை பார்வையிட்ட பின்னர் அவர் இதனைத் தெரிவித்தார்.இவ்வாறு ஒதுக்கப்பட்டுள்ள நிதிமூலம் சேதமடைந்த நீர்ப்பாசன, குளங்கள், கால்வாய்கள் என்பன அடுத்த அறுவடைக் காலத்திற்கிடையில் அதாவது எதிர்வரும் மார்ச் மாதத்திற்குள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என அவர் தெரிவித்தார்.

## இவ்வருடம் நெல் அறுவடையில் வீழ்ச்சி

(கொழும்பு)

பெருவெள்ளத்தினால் இந்த ஆண்டில் நெல் அறுவடை நான்கு இலட்சம் மெட்றிக் தொன்னால் வீழ்ச்சியடையும் என்று அரசாங்க புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

2010-11 பெரும்போகத்தில் மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை, அனுராதபுரம், பொலன்னறுவை, வவுனியா மாவட்டங்களில் அதிக அறுவடை எதிர்பார்க்கப்பட்டது. அதிக அறுவடை எதிர்பார்க்கப்பட்ட இந்த ஆறு மாவட்டங்களிலும் 275,000 ஏக்கர் நிலப்பரப்பில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டிருருந்தது.

இதில் சுமார் 88,500 ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்த பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. மட்டக்களப்பில் 49,000 ஏக்கரிலும், அனுராதபுரத்தில் 14,400 ஏக்கரிலும், அம்பாறையில் 11,500 ஏக்கரிலும், திருகோணமலையில் 7,400 ஏக்கரிலும், பொலன்னறுவையில் 6,000 ஏக்கரிலும் பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இதன் காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்திலேயே அதிக அறுவடை இழக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

அங்கு210,000 மெற்றிக் தொன் அறுவடை இழப்பு ஏற்பட்டுள்ளது. அனுராதபுரத்தில் 62,000 மெற்றிக்தொன்னும், பொலன்ன றுவையில் 26, 000 மெற்றிக் தொன்னும் அறுவடை இழப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

பெருவெள்ளறத்தினால் ஏற்பட்டுள்ள மொத்த அறுவடை இழப்பு 383,852 மெற்றிக் தொன்னாகும். இம்முறை பெரும் போகத்தில் எதிர்பார்க்கப்பட்ட அறுவடையில் 14.5 வீத வீழ்ச்சி ஏற்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் பெருவெள்ளத்தினால் ஏற்பட்டுள்ள சேதங்கள் இன்னமும் முழுமையாக மதிப்பீடு செய்யப்படாததால் இந்த இழப்பு மேலும் அதிகரிக்கும் வாய்ப்பு இருப்பதாகத் தெரியவருகிறது.

# கண்ணி வெடிகளால் மக்களுக்கு ஆபத்து எதுவும் இல்லையாம்!

(கொழும்பு)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தொடர்ச்சியாகப் பெய்த மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால், புதைக்கப்பட்ட கண்ணி வெடிகளால் மக்களுக்கு ஆபத்து ஏற்படும் என வெளிவந்த செய்திகளை இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் உபய மெதவல்ல மறுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில், வடக்கு மற்றும் கிழக்குப் பகுதியில் 95 வீதமான நிலப்பரப்பில் கண்ணி வெடிகள் அகற்றப்பட்டுள்ளன. அத்துடன் இப்பிரதேசங்களின் பெரும்பாலான பிரதேசங்களில் மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

தற்போதைய மழையை அடுத்து ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் கண்ணிவெடிகளால் எவரும் பாதிக்கப்பட்டதாக எவ்வித தகவல்களும் எமக்குக் கிடைக்கவில்லை. எனவே, வெள்ளத்தில் கண்ணிவெடிகள் அள்ளுப்பட்டு மக்களுக்கு சேதங்களை ஏற்படுத்தும் என்ற தகவலில் எவ்வித உண்மையும் இல்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

## ஒப்பந்தகாரர் சமுகம் தரவும்

(யாழ்ப்பாணம்)


பாடசாலைகளின் கட்டடங்கள் நிர்மாணிப்புப் பணியில் ஈடுபடும் ஒப்பந்தக்காரர்கள் அனைவரையும் இன்று பிற்பகல் 2.00 மணிக்கு யாழ். கல்வி வலயத்தில் நடைபெறும் கூட்டத்திற்குத் தவறாது சமுகமளிக்கும்படி வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ. இளங்கோவன் கேட்டுக் கொண்டுள்ளார். (பா)

# வடபகுதியின் கல்விச் செயற்பாட்டிற்கு அமைச்சர் டக்ளஸ் முக்கியத்துவம் அளிப்பு

## வடமாகாண ஆளுநர் ஜி. ஏ.சந்திரசிறி

(யாழ்ப்பாணம்)

**பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வடபகுதியின் கல்விச் செயற்பாட்டிற்கு அதிகளவு முக்கியத்துவம் கொடுத்து வருகின்றார் என வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி தெரிவித்தார்.**






யாழ் வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தின் ஆரம்பப் பிரிவு பரிசளிப்பு விழா மற்றும் ஸ்தாபக தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த நிகழ்வில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கலந்து கொள்வதாக இருந்த போதிலும் தவிர்க்க முடியாத சூழ்நிலையால் கலந்து கொள்ள முடியாமல் போனதாக வும் இருப்பினும் நிகழ்விற்கு தமது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதாகவும் சுட்டிக்காட்டிய ஆளுநர் ஜனாதிபதியின் தலைமையின் கீழ் வடபகுதியில் கல்வித் துறைக்கு முக்கிய இடம் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வடபகுதியின் கல்விச் செயற்பாட்டிற்கு அதிகளவு முக்கியத்துவம் கொடுத்து வருவதுடன் அவரது வழிகாட்டுதலின் பிரகாரம் இந்தப் பாடசாலைக்கென கணனிக் கூடம் அமைக்கப்பட்டு இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கல்வியமைச்சால் தெரிவு செய்யப்பட்ட சிறந்த 110 பாடசாலைகளில் இப்பாடசாலையும் ஒன்று என்பதுடன் தொடர்ச்சியாகவும் கல்விச் செயற்பாட்டிற்கு பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளை மாகாண சபையூடாகவும் மேற்கொள்ள உள்ள அதேவேளை கொழும்பிலிருந்து ஒரு தொகுதி நூல்களையும் தருவித்துள்ளோம். இவற்றைக் கொண்டு இப்பாடசாலைக்கென சிறந்த நூலகத்தை உருவாக்க வேண்டும்.

இப்பாடசாலையின் எதிர்கால வளர்ச்சி மாணவர்களினதும் பெற்றோர்களினதும் கைகளிலேயே தங்கியுள்ள நிலையில் எல்லோரும் பொறுப்புணர்ந்து பங்காற்ற வேண்டும் என்றும் மேலும் தெரிவித்தார்.

முன்னதாக புதிதாக அமைக்கப்பட்ட கணனிக் கூடத்திற்கான பெயர்ப்பலகையினை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் இணைந்து திரைநீக்கம் செய்து வைத்ததுடன் கணனிக் கூடத்தையும் திறந்து வைத்தனர்.

தொடர்ந்து பிரதான மண்டபத்திற்கான நினைவுக் கல்லினை திரைநீக்கம் செய்து வைத்த அதிதிகள் கல்விச் சமூகத்தால் பிரதான அரங்கிற்கு அழைத்து வரப்பட்டனர்.

பாடசாலை அதிபர் கனகராஜா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சரான டக்ளஸ் தேவானந்தா உரையாற்றுகையில்,

மீண்டும் இந்தப் பாடசாலையை இயங்க வைக்க வேண்டுமென கல்விச் சமூகத்தால் என்னிடம் பல கோரிக்கைகள் விடுக்கப்பட்ட போதிலும் அதற்கேற்ப ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ யாழ் மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க ஆகியோருடன் கலந்துரையாடியதன் பிரகாரம் சொந்த இடத்தில் மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளது.

கடந்த 29.09.2010 அன்று சம்பிரதாய பூர்வமாக இந்தப் பாடசாலை மீளவும் திறந்து வைக்கப்பட்ட போதிலும் சில அடிப்படை தேவைகள் பூர்த்தி செய்ய முடியாத பட்சத்தில் தொடர்ச்சியாக இனங்காண்பதில் பல இடர்பாடுகள் இருந்ததாகவும் தற்போது கட்டடங்கள் மீண்டும் புனரமைக்கப்பட்டுள்ள நிலையில் புதுப்பொலிவுடன் பாடசாலை இம்மாதம் முதல் இயங்கி வருவதாகவும் அமைச்சர் அங்கு சுட்டிக்காட்டினார்.

தொடர்ந்து பாடசாலைக்கென தொலைக்காட்சிப் பெட்டி பாடசாலை அதிபரிடம் வழங்கி வைக்கப்பட்டதுடன் ஒரு தொகுதி நூல்கள் நூலக ஆசிரியையிடம் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் பொதுநிதி முகாமைத்துறை நிபுணர் சந்திரகுமாரன் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் வடமாகாண கல்விப் பணிப்பாளர் பா. விக்னேஸ்வரன் உள்ளிட்ட துறைசார்ந்த பலரும் கலந்து கொண்டனர்.

## கால்கோள் விழா

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாசாலையின் ஆரம்பப் பாடசாலை மாணவர்களின் கால் கோள் விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் தி. சத்தியவரதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் நெடுந்தீவு அமைப்பாளர் தோழர் ரஜீவ் பிரதம விருந்தினராகவும் நெடுந்தீவுக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் தி. அரசரட்ணம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

## இளைஞர் யுவதிகளுக்கான பாடல் போட்டி

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை றொஷாறியன் சனசமூக நிலையம் நடத்தும் இளைஞர் யுவதிகளுக்கான பாடல் போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு கொழும்புத்துறை ஆனந்த வடலி வீதியிலுள்ள மேற்படி சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக 'பெனிசுலா சுப்பமால்' நிறுவன இயக்குநர் எஸ். றீகன் கலந்து கொள்வதுடன், நிகழ்வையும் ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

திருமறைக் கலா மன்ற இசைத்துறைப் பொறுப்பாளர் ம. யேசுதாசன் தலைமையில் நடுவர் குழுவினர் சிறந்த பாடகர்களைத் தெரிவு செய்யவுள்ளனர்.

மேற்படி பாடல் போட்டிக்கு விண்ணப்பித்தவர்களும் இதில் கலந்து கொள்ள ஆர்வமுள்ளவர்களும் பங்குபற்றலாம் என்று மேற்படி சனசமூக நிலையத் தலைவர் ஜோ. ஜெஸ்ரின் தெரிவித்தார். (52)

# வேட்பாளர் தெரிவுக்கான விண்ணப்பங்கள் கிடைப்பு

(வவுனியா)

மன்னார் நகர சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் போட்டியிடுவதற்கு தாம் எதிர்பார்த்ததற்கு மேலாக விண்ணப்பங்கள் கிடைத்திருப்பதாக த.தே. கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் விநோநோதராதலிங்கம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில், தகுதி நிர்வாகத் திறமை கொண்டவர்களே தெரிவு செய்யப்படவுள்ளதுடன், இந்த அடிப்படையில் மன்னாரில் உள்ள நான்கு பிரதேச சபைகளுக்கும் வேட்பாளர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் மன்னார் நகர சபை, மன்னார் நகரம், நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு ஆகிய பிரதேச சபைகளுக்கு மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கு நியமனப் பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன என அவர் தெரிவித்தார். இதேவேளை, ஏனைய கட்சிகளும் மன்னாரில் சகல சபைகளுக்கும் வேட்பாளர்களைத் தெரிவு செய்வதில் தீவிரம் காட்டி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (39)



**மருனார்மடம் அருள்வளர் சுந்தர ஆஞ்சநேயர் ஆலயத்தில் தீர்த்தோற்சவ விழா நடைபெற்றபோது பக்தி கானங்கள் இசையரங்கு நிகழ்வில் ஈழத்து சீர்காழி என அழைக்கப்படும் இசையாளர் குணரத்தினம் சிவானந்தராசா (நயினை சிவா) அவர்களுக்கு சுந்தர ஆஞ்சநேயர் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சுந்தரேஸ்வரக்குருக்கள் பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதைக்காணலாம். (60)**

# மீள்குடியேறிய மக்களுக்கு வழங்கப்பட்ட உலக உணவுத்திட்ட நிவாரணம் நிறுத்தம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு ஆறு மாத காலத்தினுள் மக்களுக்கான நிவாரணம் நிறுத்தப்பட்டுள்ளதாக உலக உணவுத் திட்டத்தின் கிளிநொச்சி மாவட்டச் செயலக இணைப்பாளர் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக தெரிவிக்கையில், இது வரை காலமும் மீள்குடியேறிய மக்களுக்கு ஒன்பது மாத காலத்திற்கென வழங்கப்பட்டு வந்த நிவாரணம் தற்போது ஆறு மாதகாலத்தினுள் நிறுத்தப்பட்டுள்ளது.

ஏற்கனவே, உலக உணவுத் திட்டத்தினால் வழங்கப்பட்டு வந்த நிவாரணங்கள் படிப்படியாக மக்களுக்குக் குறைப்புச் செய்யப்பட்டு வந்ததை அடுத்து தற்போது நிவாரணம் வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளது. மேலும் மூன்று மாத காலத்திற்கு மக்களுக்கு வாழ்வாதார நிலையை கருத்திற்கொண்டு திட்டத்தின் தொடர்ச்சியாக கிராமப்புற வீதி புனரமைப்பு பணிகள் மக்களுக்கு வழங்கப்படவுள்ளது.

இதில், நிரந்தர வருமானம் பெறுகின்ற குடும்பங்கள், அரச உத்தியோகத்தர்கள் தவிர்ந்த ஏனைய குடும்பங்களை இப்பணிகளில் ஈடுபடுத்தி அதன் மூலம் அவர்களுக்குக் கொடுப்பனவை வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளதாக அவர் தெரிவித்தார். (28)

# சூரியப் பொங்கலில் கலந்துகொண்ட ஒஸ்மானிய மாணவிகள் மயக்கம்


(யாழ்ப்பாணம்)

யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நேற்று நடைபெற்ற தேசியப் பொங்கல் விழாவில் கலந்து கொண்ட யாழ். ஒஸ்மானியாக் கல்லூரி மாணவிகள் ஐந்து பேர் மயக்கமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று முற்பகல் அனுமதிக்கப்பட்டனர்.

யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்ற மேற்படி .பொங்கல் விழாவில் ஜனாதிபதி பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட நிகழ்வினைக் கண்டுகளிக்குமுகமாக யாழ். ஒஸ்மானியாக் கல்லூரி மாணவ மாணவியரும் கலந்து கொண்டனர். இவர்கள் நிகழ்விடத்தில் மாணவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பகுதியில் அமர்ந்திருந்தபோது அவர்களில் ஐவர் மயக்கமடைந்தனர்.


இவர்கள் உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டனர். இவர்களைப் பரிசோதித்த வைத்தியர் இவர்களுக்குச் சாதாரண பசி மயக்கமே ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

இதன் பின்னர் மாணவிகளுக்கு குளிர்பானம் கொடுக்கப்பட்டதுடன் மாணவிகளின் உடல் நிலை வழமைக்குத் திரும்பியது. (பா)



# தமிழ் மக்கள் பிரச்சினைக்கு நியாயமான தீர்வுத்திட்டம் முன்வைக்கப்படவேண்டும்

## நாட்டைப் பிளவுபடுத்தும் நோக்கமல்ல என்கிறார் சுரேஷ்



(யாழ்ப்பாணம்)

பிரிவினைவாதத்தைத் தூண்டவேண்டும் என்பதோ அல்லது நாட்டைப் பிளவுபடுத்த வேண்டும் என்பதோ தமது நோக்கம் கிடையாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வுத் திட்டம் ஒன்று முன்வைக்கப்பட வேண்டும் என்பதே தமது கோரிக்கை என அவர் குறிப்பிட்டுள்ளார். அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தைகள் சாதகமான முறையில் காணப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார். ஈ.பி.டி.பி கட்சியை போட்டியாக கருதவில்லை எனவும் கடந்த தேர்தலகளில் அது நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மழை வெள்ளம் காரணமாக மக்கள் பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ளதாகவும் இதனால் வேட்பு மனுத் தாக்கல் செய்யும் காலத்தை அல்லது தேர்தல்கள் நடத்தும் காலத்தை மாற்றியமைக்க வேண்டுமென அரசாங்கத்திடம் கோருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் இணைநது செயற்படப் போவதாக வெளியாகும் தகவல்களில் எதுவித உண்மையும் கிடையாது என அவர் குறிப்பிட்டுள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஓர் சுயாதீன கட்சி எனவும், தொடர்ந்தும் சுயாதீனமாக செயற்படுவதனையே தாம் விரும்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும் அரசாங்கத்துடன் இணைந்து அபிவிருத்தித் திட்டங்களில் ஈடுபடப் போவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். புலிகள் தோற்கடிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழர் பிரசினைகளுக்காக தீர்வுததிட்டத்தை பெற்றுக் கொடுக்கும் பொறுப்பு தம்மிடம் வந்திருப்பதாக அவர் தெரிவித்துள்ளார். புலிகளை நாடாளுமன்றில் பிரதி நிதித்துவப் படுத்தியதாக மேற்கொள்ளப்பட்ட பிரசாரங்களில் உண்மையில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

புலிகளின் சிறுவர்களை படையில் இணைத்துக் கொள்ளல் போன்ற நடவடிக்கைகளுக்கு எதிராக தமது கட்சி குரல் கொடுத்ததாக அவர் தெரிவித்துள்ளார். சில ஊடகங்களும், அரசியல் வாதிகளும் தம்மை புலி ஆதரவுக் கட்சியாக முத்திரை குத்தியதாக அவர் சுட்டிககாட்டியுள்ளார்.

# உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட கூட்டமைப்புடன் ஏழு கட்சிகள் இணைவு

(கொழும்பு)

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கீழ் ஒன்றிணைந்த ஏழு தமிழ் அரசியற்கட்சிகள் போட்டியிடவுள்ளதாக கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கொழும்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணி, பத்மநாபா, ஈ.பி.ஆர்.எல்.எப், தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பு, புளொட் ஆகிய கட்சிகளுக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

தமிழ்த் தேசியக் கூட்ட மைப்புடன் நடத்தப்பட்ட பல சுற்றுப் பேச்சுக்களின் முடிவில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வீடு சின்னத்தில் போட்டியிடுவதற்கு முடிவெடுக்கப்பட்டதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார். அதேவேளை, வடக்கு, கிழக்கில் ஈ.பி.டி.பியும், தமிழ் மக்கள் விடுதலைப் புலி கள் கட்சயும் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைந்து போட்டியிடவுள்ளதாகவும் அந்த வார இதழ் தகவல் வெளியிட்டுள்ளது.

# நடமாடும் சேவையை நடாத்திய அரச அதிபருக்கு நன்றி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளனத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட முஸ்லிம் பிரதேச விசேட நடமாடும் சேவையில் தலைமை தாங்கிய யாழ் மாவட்ட அரசாங்க அதிபருக்கு சம்மேளனத்தின் அங்கமான ஜனாஸா நலன்புரி சங்கத்தினர் பாராட்டுக்களைத் தெரிவித்தனர்.

இது தொடர்பாக சங்கத்தினர் வெளியிட்டுள்ள செய்திக் குறிபபில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது - அரச அதிபரான தாங்கள் முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்றத்தினை ஊக்குவிப்பதாகவும், முஸ்லிம் மக்கள் நிச்சயம் இங்கு குடியேற்றப்பட வேண்டும் என்றும், 1990 ஆம் ஆண்டிற்கு முன்னர் எவ்வாறு சகோதர சமூகமாகிய தமிழ் மக்களுடன் அன்பாகவும், ஒற்றுமையாகவும் வாழ்ந்தார்களோ அப்படி ஒரு நிலைமை மீண்டும் ஏற்படவேண்டும் என்றும் தாங்கள் தங்களால் முடிந்த உதவிகளை அரசு ஊடாகவும், அரசசார்பற்ற நிறுவனங்கள் ஊடாகவும் செய்து தருவதாக வாக்குறுதி தந்தீர்கள்.

அத்துடன், மீளக்குடியேறிய முஸ்லிம் மக்களுக்கு முதற்கட்டமாக 5 ஆயிரம் ரூபாவை வழங்கி வைத்தீர்கள். அத்துடன் 6 ஆயிரம் முஸ்லிம் குடும்பங்களுக்குக் கட்டம் கட்டமாக வீடமைப்புத் திட்டத்தின் கீழ் உள்வாங்குவதாகவும், தொழில் முயற்சிக்கான கடன் உதவிகளையும் செய்து தருவதாகவும் கூறி முஸ்லிம் மக்களுக்கு ஊக்கம் தந்து எங்களை இந்த மண்ணின் சொந்தக்காரர்கள் என்ற உரிமையைத் தந்த உங்களைப் பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சங்கானை, உடுவில் பிரதேசங்களில் 5 டெங்கு நோயாளிகள் கண்டுபிடிப்பு

(சண்டிலிப்பாய்)

சங்கானை மற்றும் உடுவில் பொதுச் சுகாதாரப் பிரிவிற்குப்பட்ட பகுதிகளில் 5 டெங்கு நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சங்கானையில் ஒருவரும், உடுவில் பகுதியில் நால்வருமென இந்த டெங்கு நோயாளிகள் இனங்காணப்பட்டனர்.

சங்கானைப் பொதுச் சுகாதாரப் பிரிவிற்குட்பட்ட அராலிப் பகுதியிலிருந்தே மேற்படி டெங்கு நோயாளி இனங் காணப்பட்டார். இவர் யாழ். நகரப் பகுதியொன்றில் கடை ஒன்றில் பணியாற்றுபவரெனவும், எனவே இவருக்கு நகரப் பகுதியில் நோய்த் தொற்று ஏற்பட்டிருக்கலாமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

அராலிப் பகுதியில் டெங்கு நோய் தொடர்பாக பொதுச் சுகாதாரபகுதியினர் ஆராய்ந்து வருகின்றனர். இப்பகுதியில் தொடர்ச்சியான டெங்கு ஒழிபபு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வந்தபோதிலும், மேற்படி நோயாளி இனங்காணப்பட்டுள்ளார்.

இதேபோன்று உடுவில், சங்குவேலிப் பகுதிகளிலிருந்து 4 டெங்கு நோயாளிகள் இனங் காணப்பட்டுள்ளனர். நோயாளிகளில் ஒருவர் வவுனியாவில் இருந்து வந்தவரெனவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது தொடர்ச்சியான மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கை அடுத்து, டெங்கு நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்துத இந்த நோய்த் தாக்கம் ஏற்பட்டிருக்கலாமெனத் தெரிவிக்கப்படுகிறது. (54)

# மடு உற்சவத்திற்கான ஏற்பாடுகள் பூர்த்தியாம்

(மன்னார்)

இந்த ஆண்டு மடு உற்சவத்திற்கான சகல ஏற்பாடுகளும் பாதுகாப்பும் மன்னார் மாவட்ட செயலாளரின் அனுசரணையுடன் திருப்திகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட 61 ஆவது படையணியின் தளபதி பிரிகேடியர் அஜித் காரியகரவண தெரிவித்தார்.

யாத்திரிகர்க்ள மடுத் தேவாலயத்தில் 24 மணிநேரமும் வழிபாட்டை மேற்கொள்வதற்குத் தற்போது வாய்ப்புக் கிடைத்துள்ளது.

இந்தியாவின் உதவியுடன் மதவாச்சி, தலைமன்னார் ரயில் பாதை நிர்மாணத்தின் முதற் கட்டம் நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் மடு உற்சவம் ஆரம்பிப்பதற்கு முன்னதாக ரயில் பாதை அமைப்பு பூர்த்தி செய்வதற்கு அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

மன்னார் மடுப் பகுதிகளில் நேற்று முன்தினம் பிரிகேடியர் கண்காணிப்புச் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டபோதே அவர் இந்தத் தகவல்களை வெளியிட்டார். மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் சுமார் 35 ஆயிரம் பேர் மீளக்குடியமர்த்தப் பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்

இவ்வாறு மீளக்குடியமர்ந்தவர்களின் சேம நலனையும், பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும் கடப்பாடு இராணுவத்திற்கு உண்டு எனவும் அவர் தெரிவித்தார்.

# பிரதான கட்சியின் மக்கள் பிரதிநிதிகள் வடக்கில் பதற்றத்தை ஏற்படுத்த முயற்சி

(யாழ்ப்பாணம்)

வடக்கில் செயற்படும் பிரதான கட்சியொன்றின் மக்கள் பிரதிநிதிகள் சிலர் வடபகுதியில் மீண்டும் பதற்றத்தை ஏற்படுத்த முயற்சித்து வருவதாக புலனாய்வுப் பிரிவினருக்கு தகவல் கிடைத்துள்ளதாக லங்காதீப தெரிவித்துள்ளது.

இவர்கள் கடந்த காலத்தில் வடக்கில் சில நெருக்கடியான சம்பவங்களை ஏற்படுத்தி, சர்வதேச ஊடகங்கள் வாயிலாக அதனை பிரசாரப்படுத்தி உள்ளதாகவும் புலனாய்வு பிரிவினரின் அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகளின் மனித உரிமை பேர வைக் கூட்டத் தொடரை இலக்கு வைத்தே, அரச்hங்க படையினருக்கு அவப் பெயர் ஏற்படும் வகையில், அவர்களுக்கு எதிராக இவ்வாறு சர்வதேச ஊடகங்கள் மூலம் பிரசாரங்களை மேற்கொண்டு வருவதாக தெரியவநதுள்ளது.

பிரபலமான இரண்டு முக்கிய மக்கள் பிரதிநிதிகள் இதற்கு பங்களிப்பு வழங்கியுள்ளதாகவும் அவர்களுக்கு பல ஐரோப்பிய நாடுகளிடம் இருந்து, பணம் கிடைத்துள்ளதாகவும் புலனாய்வுப் பிரிவினர் கண்டறிந்துள்ளனர்.

கிடைக்கப் பெற்றுள்ள தகவல்களின் அடிப்படையில் விசாரணைகளை ஆரம்பித்துள்ள பாதுகாப்பு பிரிவினர் ஏற்கனவே ஒரு சந்தேக நபரை கைதுசெய்துள்ளனர் எனவும் லங்காதீப குறிப்பிட்டுள்ளது.

## பிரார்த்தனை திருவிழா

(கொக்குவில்)

பிராத்த்தனைத் திருவிழா 2011, எதிர்வரும் 29, 30 ஆம் திகதி சனி, ஞாயிறு ஆகிய இரு தினங்களில் யாழ். முற்றவெளி மைதானத்தில் தினமும் மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

தமிழ்நாட்டைச் சேர்ந்த போதகர் போல்தினகரன் குழுவினர் மேற்படி தியான வழிபாட்டு நிகழ்ச்சிகளை நடத்தவுள்ளனர்.

## இன்றைய பலன்

(18.01.2011 செவ்வாய்க்கிழமை)

பஞ்சாங்கக் குறிப்புகள்
விகிர்தி தை 04
இராகுகாலம்3.35- 5.05, சுபநேரம் 11.05 -12.35,
சதுர்த்தசி பி.இ. 5.03 திருவாதிரை,
மரண யோகம் பி.இ.12.48

இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது

-ஆதினி-

மேடம்:- தேவையற்ற பிரச்சினை, மனக்குழப்பம், முரண்படுதல்.

ரிஷபம்:- புகழப்படுதல், வெகுமானம் கிடைத்தல், இனபந்துக்கள் உதவி.

மிதுனம் :- எதிரிகள் சூழ்ச்சி, காரியக் கேடு, நிம்மதிக் குறைவு.

கடகம்:- முயற்சி பலிதம், அதிக லாபம், பிரயாணம்.

சிம்மம்:- காரிய சித்தி, கடன் வசூல், பகை நீக்கம்.

கன்னி :- பொருள் வரவு, மனமகிழ்ச்சி, பெரியோர் ஆசி.

துலாம் :- நினைத்த காரியச் சித்தி, போட்டிகளில் வெற்றி, மேலோர் பாராட்டு.

விருச்சிகம்:- மனைவி வழியால் உதவி, நற்செய்தி வரல், விருந்துபசாரம்.

தனுசு:- பதவி மாற்றம், மேலோர் உதவி, இனசனக் கொண்டாட்டம்.

மகரம்:- பதவி உயர்வு, காரிய சித்தி, நண்பர் உதவி.

கும்பம் :- தேகநல விருத்தி, ஆலய வழிபாடு, அமைதிப்போக்கு.

மீனம்:- நண்பர் உதவி, பிரயாணம், விரும்பியவை நிறைவேறல்.

# அரசின் இயலாமையை மூடிமறைப்பதற்கு சேதவிபரங்கள் மிகைப்படுத்தப்பட்டுள்ளன

## அனுரகுமர எம்.பி குற்றச்சாட்டு



(கொழும்பு)

அரசாங்கத்தின் இயலாமையை மூடி மறைப்பதற்காக சேத விபரங்கள் மிகைப்படுத்தப்பட்டுள்ளதாக ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

நாட்டில் நிலவிய மோசமான காலநிலை காரணமாக ஏற்பட்ட சேத விபரங்கள் மிகைப்படுத்தி வெளியிடப்பட்டு வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போது அவர் இதனைத் தெரிவித்தார்.

பாரிய அனர்த்த நிலைமையை வெளிப்படுத்தி தமது இயலாமையை அரசாங்கம் மறைப்பதற்கு முயற்சிப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

200க்கும் மேற்பட்ட வாவிகள் சேதடைந்துள்ளதாக சில அமைச்சர்கள் செய்து வரும் பிரசாரம் அடிப்படையற்றதெனவும் அவர் குறிப்பிட்டார்.

# புலிகளின் 5 கப்பல்கள் பழுதடைந்துள்ளனவாம்

(கொழும்பு)

புலிகளின் ஐந்து கப்பல்கள் தொடர்பான தகவல்களை சிங்கள ஊடகமொன்று வெளியிட்டுள்ளது.

புலிகளுக்கு சொந்தமான எட்டு கப்பல்கள் தொடர்பான விசாரணைகளின் இந்த ஐந்து கப்பல்கள் தொடர்பான மேலதிக தகவல்கள் கிடைக்கப் பெற்றதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

புலிகளின் ஐந்து கப்பல்கள் பழுதடைந்துள்ளதாகவும் அவற்றை பழுது பார்க்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் நீர் வடிகாலமைப்புத்துறை அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

குறித்த கப்பல்களின் நிறத்தையும் பெயரையும் மாற்றி பயணங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

குறித்த கப்பல்களைக் கைப்பற்றி இலங்கைக்குக் கொண்டு வரும் வகையில் சட்டங்களில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

# தேசிய கீதப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்படும்

(கொழும்பு)


தேசிய கீதம் தொடர்பான பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்படும் என தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார். சகல இன சமூகங்களினதும் உரிமைகள் பாதுகாக்கப்படக் கூடிய வகையில் இந்த சர்ச்சைக்கு தீர்வு காணப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இரத்தினபுரியில் நடைபெற்ற தைப் பொங்கல் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இந்த நிகழ்விலும் சிங்கள மொழியில் தேசிய கீதம் பாடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. மொழி பெயர்ப்பாளர்கள் அவசியமற்ற ஓர் சமூகத்தைக் கட்டியெழுப்புவதே தமது நோக்கம் என அவர் தெரிவித்துள்ளார்.

# முன்னாள் இராணுவத்தளபதி சரத்பொன்சேகாவை இயற்கை மரணமடைய வைப்பதற்கு சூழ்ச்சியாம்

(கொழும்பு)

இராணுவ நீதிமன்றத்தினால் குற்றவாளியாகக் காணப்பட்டுச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை சிறைக் கூடத்துக்குள்ளேயே இயற்கை மரணத்தைத் தழுவ வைப்பதற்கான சூழ்ச்சிகள் இடம்பெறுகின்றமை



குறித்த தகவல்கள் வெளியாகி உள்ளமை தெரிய வருவதாக சிங்கள இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

புலிகளின் தற்கொலைக் குண்டுதாரியின் தாக்குதலில் காயமடைந்த சரத் பொன்சேகாவுக்கு சில சிகிச்சைகளும் உடற்பயிற்சிகளும் தொடராக வழங்கப்படவேண்டிய நிலையில் அவற்றினை சிறையில் அவருக்கு வழங்காது இவ்வாறு இயற்கை மரணத்தை தழுவிக்கும் முயற்சி இடம்பெறுவதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன என அந்த ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது.

சரத் பொன்சேகாவின் கட்சியின் தேசிய அமைப்பாளரான டிலான் அலஸ் முன்னாள் இராணுவத் தளபதியினை வெலிக்கடைச் சிறையில் பார்வையிட்டார் எனவும் அப்போது சரத்பொன்சேகா மிகவும் களைத்த நிலையில் காணப்பட்டார் என டிலான் அலஸ் தமது இணையத்தளத் துக்குத் தெரிவித்தார் எனவும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

# புலிகளின் நிதி நிறுவனங்கள் சுவிட்சர்லாந்தில் கண்டுபிடிப்பு

## என்கிறது திவயின நாளிதழ்

(கொழும்பு)

சுவிட்சர்லாந்தில் இயங்கி வந்த புலிகளின் 23 நிதி நிறுவனங்கள் கண்டறியப்பட்டுள்ளதாகவும் 19 மாதங்களாக சுவிட்சர்லாந்து சட்டமா அதிபர் அலுவலகம் மேற்கொண்ட விசாரணைகளில் இந்த தகவல் தெரியவந்துள்ளதாக திவயின நாளிதழ் தெரிவித்துள்ளது.

இந்த நிதி நிறுவனங்களில் பிரதான நிறைவேற்று அதிகாரிகள் 10 பேர் சட்டமா அதிபர் அலுவலகத்தின் உத்தரவின் பேரில்,சுவிஸ் பொட்போல் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு உள்ளதாகவும் ஏற்கன்வே ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

குறித்த நிதி நிறுவனங்களில் பைனோன்ஸ், எனலோட் பைனேன்ஸ் ஆகிய நிறுவனங்கள் பிரதான நிறுவனங்கள் என தெரியவந்துள்ளதா கவும், புலிகளின் நிறுவனங்கள் நிதி வைப்பீடுகள் மூலம் 200 மில்லியன் சுவிஸ் பிராங்குகளை சேரித்துள்ளதாகவும் திவயின செய்தி வெ்ளியிட்டுள்ளது.

அத்துடன் போலி ஊதிய பட்டியல்களை சுவிஸ் வங்கிகளிடம் சமர்ப்பித்து, இந்த நிறுவனங்கள் கடனுதவிகளையும் பெற்றுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக அந்த ஊடகம் தெரிவித்துள்ளது.

சம்பந்தப்பட்ட நிதி நிறுவனங்களில் ஒரு நிறுவனத்தில் பணியாற்றியவர் அப்துல்லா என அழைக்கப்பட்டாலும், அவர், புலிகளின் இரணவில் முகாமில் தலைவராகப் பணியாற்றி வந்த ஜெயபாலன் என தெரியவந்திருப்பதாகவும் திவயின குறிப்பிட்டுள்ளது

# நாடாளுமன்ற உறுப்பினர் பதவி ரத்து?

(கொழும்பு)



ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சரத்பொன்சேகாவிற்கு பதிலாக பெயரிடப்பட்ட லக்ஸ்மன் நிபுணாராச்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி ரத்து செய்யப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகாவிற்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட காரணத்தினால் அவருக்கு அடுத்த படியாக அதிக விருப்பு வாக்குகளைப் பெற்றுக் கொண்ட லக்ஸ்மன் நிபுணாராச்சியின் பெயர் பரிந்துரை செய்யப்பட்டது.

எனினும்,லக்ஸ்மன் நிபுணாராச்சி இந்தப் பதவியை ஏற்றுக் கொள்ளவில்லை. இதனால் அந்தப் பதவி தொடர்ந்தும் வெற்றிடமாகக் காணப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

உரிய காலத்தில் பதவிப் பிரமாணம் செய்து கொள்ளாத காரணத்தினால் லக்ஸ்மன் நிபுணாராச்சி நாடாளுமன்ற உறுப்பினராக இனிபதவிப் பிரமாணம் செய்து கொள்ள முடியாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

லக்ஸ்மன் நிபுணாராச்சிக்கு அடுத்து அதிக விருப்பு வாக்குகளைப் பெற்றுக் கொண்டவரை நியமிக்குமாறு நாடாளுமன்ற செயலாளர் தம்மிக்க கித்துலோகொட தேர்தல் ஆணையாளரிடம் கோரிக்கை விடுக்கவுள்ளார்.

# கடற்றொழில்சங்க சமாசத்துக்கு வடமராட்சி கிழக்கில் புதிய கட்டம்

## நாளை மறுதினம் திறப்பு விழா

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு தாளையடி பிரதான வீதியில் அமைந்துள்ள வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச புதிய தலைமை அலுவலகத் திறப்பு விழா நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவிருக்கிறது.

வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தலைவர் கொ.அ.ஸ்ரனிஸ்லாஸ் தலைமையில் நடைபெறவிருக்கும் இந்நிகழ்வில் பாரம் பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ள உள்ளார்.


வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி, யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதிநிதித்தலைவருமான முருகேசு சந்திரகுமார், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்த்திரி அலென்ரின் (உதயன்), யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும்,

யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே. அருந்தவநாதன், யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத்துறை உதவிப்பணிப்பாளர் இ.இரவீந்திரன், வடம ராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் தி.ந. திருலிங்கநாதன், 55ஆவது படைப்பிரிவு கட்டளை அதிகாரி பிரிகேடியர் கே. எல். ஏ. எஸ். பெரேரா 551ஆவது பிரிக்கேட் கட்டளை அதிகாரி லெப். கேணல் சுமித் பிரேம்ணல், ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சி வடமராட்சி அமைப்பாளர் ஐ. ஸ்ரீரங்கேஸ்வரன். ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சி வடமராட்சி கிழக்கு அமைப்பாளர் இ.சதீஸ் யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க சமாசங்களின் சம்மேளன தலைவர் சி. தவரத்தினம், போரூட் நிறுவனப்பிரதிநிதிகள், சமாச அங்கத்துவ சங்கங்களின் பிரதிநிதிகள், அரச அதிகாரிகள், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், சங்கங்களின் அங்கத்தவர்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

போரூட், G.T.Z, அரச சார்பற்ற நிறுவனங்களின் நிதிப்பங்களிப்புடன் இப்புதிய கட்டடம் அமைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (70)

# வெள்ள பாதிப்புக்குள்ளான நாடுகளின் மக்களுக்காக பாப்பரசர் பிரார்த்தனை

(கொழும்பு)



வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட நாடுகளின் மக்களுக்காக பாப்பாண்டவர் 16ம் பெனடிக் பிரார்த்தனை செய்துள்ளார். இலங்கை, பிரேஸில், அவுஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளின் மக்களுக்காக பாப்பரசர் இந்த வேண்டுதல்களை மேற்கொண்டுள்ளார்.

மழை வெள்ளம் மற்றும் மண்சரிவு ஆகிய அனர்த்தங்களினால் மக்கள் பெரும் துயரங்களை அனுபவித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. சென் பீட்டர்ஸ் சதுக்க தேவாலயத்தில் நேற்றைய தினம் நடைபெற்ற ஆராதனைகளின் போது இலங்கை உள்ளிட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக பாப்பரசர் விசேட பிரார்த்தனைகளில் ஈடுபட்டுள்ளார்.

உயிரிழந்த அனைவரையும் இறைவன் ஏற்றுக் கொள்வாராக எனவும்,பாதிக்கப்பட்ட மக்களுக்கு சக்தியை கொடுக்குமாறும் பாப்பரசர்,கடவுளிடம் தனது மன்றாண்டில் கோரிக்கை விடுத்துள்ளார்

## இலங்கை-மேற்கிந்திய அணிகளிடையே ஒரு நாள் தொடர் 31ஆம் திகதி ஆரம்பம்

(கொழும்பு)

பலத்த மழை காரணமாக கைவிடப்பட்டிருந்த இலங்கை, மேற்கிந்தியத்தீவு அணிகளுக்கிடையிலான ஒரு நாள் தொடர் மீளவும் நடத்தப்படவுள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

இதன்படி இரு அணிகளுக்குமிடையிலான இந்த ஒரு நாள் போட்டித் தொடர் மூன்று போட்டிகளைக் கொண்டதாக அம்பாந்தோட்டை, கொழும்பு ஆகிய மைதானங்களில் நடைபெறவுள்ளது.

நடத்தப்படவுள்ள மூன்று போட்டிகளும் பகல், இரவு ஆட்டமாகவே நடத்தப்படுமென இலங்கை கிரிக்கெட் சபை தெரிவித்தது.

போட்டி நடைபெறவுள்ள தினங்கள் வருமாறு, ஜனவரி 31 சூரியவேவ மைதானம் அம்பாந்தோட்டை, பெப்ரவரி 04 மற்றும் பெப்ரவரி 06 ஆகிய திகதிகளில் போட்டிகள் கொழும்பு பிரேமதாச மைதானத்தில் நடத்தப்படவுள்ளன.

எதிர்வரும் உலகக் கிண்ணப் போட்டிக்குப் பயிற்சியாக இரு அணிகளுக்குமிடையிலான இந்தப் போட்டித் தொடர் அமையுமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

## யாழ். மாவட்ட கூடைப்பந்து அணி 30 புள்ளிகளால் வெற்றிபெற்றது

(கண்டி)

கண்டி மாவட்ட கூடைப்பந்தாட்ட சம்மேளனத்தால் ஒழுங்குபடுத்தப்பட்ட யாழ்ப்பாண, மாத்தறை மாவட்டங்களுக்கிடையிலான கூடைப்பந்தாட்டப் போட்டியில் யாழ். மாவட்டம் 30 புள்ளிகளால் வெற்றிபெற்றது.

கண்டி கிங்ஸ்ஆட்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் இடைவேளையில் யாழ். மாவட்ட அணி, 46:25 என முன்னிலை வகித்தது. இடைவேளைக்குப் பின்னர் ஆட்டம் தொடங்கியவேளை, யாழ். மாவட்ட வீரர்களின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாமல் மாத்தறை மாவட்ட வீரர்கள் நிலைகுலைந்தனர்.

இறுதியில் ஆட்டம் நிறைவடைந்த வேளை, யாழ். மாவட்ட அணி 80 : 50 எனப் பெற்று 30 புள்ளிகளால் வெற்றி பெற்றது. யாழ். மாவட்ட அணி சார்பாக என். தேவகர் (24), கே. பிரசாந்தன் (16) புள்ளிகளைப் பெற்றுக் கொடுத்து அணியின் வெற்றிக்குத் துணை புரிந்தனர். இதேவேளை, மாத்தறை மாவட்டம் சார்பாக டினுசா (14), உதித்தா (12) ஆகிய இருவரும் அதிக புள்ளிகளையும் பெற்றுக் கொடுத்தனர்.

இப்போட்டியின் நடுவர்களாக அனுரத்த விஜயசிங்க, தொடங்கொட ஆகியோர் கடமையாற்றினர்.




## ஆளுநர் நிதியுதவி

(நெல்லியடி)

பருத்தித்துறை லீக் அணியினர் சம்பியனானதைத் தொடர்ந்து வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி நிதியுதவியை வழங்கியுள்ளார்.

கடந்த வெள்ளக்கிழமை யாழ்ப்பாணத்தில் அவரது காரியாலயத்தில் வைத்தே இவர்களைச் சந்தித்துள்ளார்.

இவர்கள் வெற்றிபெற்றமைக்குப் பாராட்டுத் தெரிவித்ததோடு இவர்களுக்கு வேண்டிய கால்பந்தாட்டப் பொருட்கள் ஒவ்வொரு வீரருக்கும் தனித்தனியே வேடுவதற்கான நிதியுதவியைத் தான் செய்வதாகவும் உறுதியளித்தார்.

இதற்கேற்ப பருத்தித்துறை கால்பந்தாட்டச் சங்கத் தலைவர், செயலாளர்கள் விஜயம் செய்து ஒரு வீரருக்கு 8,000 ரூபா பெறுமதியான பொருட்களாக 30 வீரர்களுக்குக் கொள்வனவு செய்துள்ளனர். (12)

## செய்வதை மட்டும் கூறினால் நாம் உயர்வை எட்டமுடியாது



(கொல்கொத்தா)

நாம் செய்வதை மட்டுமே கூறினால், நாம் உயர்வை எட்டமுடியாது என இந்திய அணியின் முன்னாள் தலைவர் சௌரவ் கங்குலி தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: எனக்கு அரசியல் தெரியாது. அது தெரிந்திருந்தால், நான் இந்நிலையை அடைந்திருக்கமாட்டேன். எனது அனுபவத்தில் நான் கற்றது, நாம் செய்ததை மட்டுமே கூறினால், நாம் உயர்வை எட்டமுடியாது. அதனால் நாம் உயர்ந்த நிலையை அடைந்ததும் வெளிப்படையாக இருக்க வேண்டும். இது அரசியல், விளையாட்டு எல்லாவற்றிற்கும் பொருந்தும். ஒரு தலைவர் என்பவர் எப்பொழுதும் உண்மையே கூறவேண்டும். அந்த உண்மை கசந்தாலும் முடிந்தவரை தன்கூட இருப்பவரிடமாவது தெரிவிக்க வேண்டும் என்றார்.

## இந்திய அணியும் அறிவிப்பு



(சென்னை)

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டித் தொடருக்கான 15 பேர் கொண்ட இந்திய அணி நேற்று அறிவிக்கப்பட்டது.

இதில் ஸ்ரீகாந்த் தலைமையிலான தேர்வுக் குழுக் கூட்டம் 15 பேர் கொண்ட இந்திய அணியை தேர்வு செய்தது. உலகக் கிண்ணப் போட்டிக்கான 15 பேர் கொண்ட அணியில் ரோகித் சர்மா, ஸ்ரீசாந் ஆகியோருக்கு இடம் வழங்கப்படவில்லை. இதேவேளை, சுழற்பந்து வீச்சாளர் பியூ சால்வா, தமிழக வீரர் அஸ்வின், யூசுப் பாதன் ஆகியோருக்கு அணியில் இடம் வழங்கப்பட்டுள்ளது.

15 பேர் கொண்ட அணி விபரம் வருமாறு: டோனி (தலைவர்), சச்சின் டெண்டுல்கர், சேவாக், கம்பீர், ஹோலி, யுவராஜ்சிங், சுரேஷ் ரெய்னா, யூசுப் பதான், ஹர்பஜன் சிங், அஸ்வின், சகீர்கான், முனாப் பட்டேல், பிரவீன் குமார், நெஹ்ரா, பியூஸ் சாவலா.

## 20 ஓட்டங்களால் முன்னிலை

(வெலிங்டன்)

நியூசிலாந்து அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணி 20 ஓட்டங்களால் முன்னிலை பெற்றது.

நியூசிலாந்து, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டி கடந்த 15ஆம் திகதி வெலிங்டன் மைதானத்தில் ஆரம்பமானது.

இதில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 134 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டத்தைப் பாகிஸ்தான் அணி தொடர்ந்தது. அணித் தலைவர் மிஸ்பா உல்-ஹக் மற்றும் யூனிஸ்கான் ஆகியோரின் இணைப்பாட்டத்தின் மூலம் பாகிஸ்தான் கௌரவமான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 376 ஓட்டங்களைப் பெற்றது. மிஸ்பா உல்ஹக் 99, யுனிஸ்கான் 73,



அசார் அலி 67 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் விட்டோரி, மாட்டின் ஆகியோர் தலா நான்கு, சௌத்தி இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

20 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்சை தொடர்ந்த நியூசிலாந்து அணி, நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை, விக்கெட் இழப்பின்றி ஒன்பது ஓட்டங்களைப் பெற்றிருந்தது. நியூசிலாந்து முதல் இனிங்ஸில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 356 ஓட்டங்கள். இன்று போட்டியின் நான்காம் நாளாகும்.

## நேற்றுத் தொடங்கியது

(மெல்போர்ன்)

இந்த ஆண்டின் முதல் கிராண்ட்சிலாம் போட்டியான அவுஸ்ரேலிய ஓபன் ரென்னிஸ் போட்டி மெல்போர்ன் நகரில் நேற்றுத் தொடங்கியது. உலகின் முதல் நிலை வீராங்கனையான கரோலின் வோஸ்னியாக்கி (டென்மார்க்) தொடக்க சுற்றில் அர்ஜென்டினாவை சேர்ந்த துல்காவை எதிர்கொண்டார். இதில் வோஸ்னியாக்கி 6-3, 6-4 என்ற நேர்செட் கணக்கில் வென்று இரண்டாவது சுற்றுக்குத் தகுதி பெற்றார்.

14ஆம் நிலை வீராங்கனையுமான மரியா ஷரபோவா முதல் சுற்றில் தாய்லாந்தை சேர்ந்த தமரைன்னை எதிர்கொண்டார். இதில் ஷரபோவா 6-1, 6-3 என்ற நேர்செட் கணக்கில் எளிதில் வென்றார். ஆறாம் நிலை வீராங்கனை பிரான்செஸ்கா (இத்தாலி) 6-7(4-7), 6-2, 6-4 என்ற செட் கணக்கில் ஸ்பெயினைச் சேர்ந்த அரண்டசாவைத் தோற்கடித்து இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார்.



ரோஜர் பெடரர் ஸ்லோவேகிய வீரர் லூகாஸ் லாகோ என்பவரை நேர் செட்களில் வீழ்த்தினார். தரநிலை வழங்கப்படாத லூகாஸ் லாகோவை, ரோஜர் பெடரர் 6- 1, 6- 1, 6- 3 என்ற நேர் செட்களில் வீழ்த்தி இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார். மற்றொரு ஆட்டத்தில் 8ஆம் தரநிலையில் உள்ள அமெரிக்க வீரர் ஆண்டி ரோடிக் செக்.வீரர் ஹாஜெக் என்பவரை 6- 1, 6- 2, 6- 2 என்ற செட் கணக்கில் வீழ்த்தினார்.

## முக்கியமான நேரத்தில் சிறப்பாக செயற்படாததால் தோல்வி ஏற்பட்டது



(ஜொகனஸ்பேர்க்)

பந்து வீச்சு, களத்தடுப்பு சிறப்பாக இருந்த போதிலும், முக்கியமான தருணத்தில் சிறப்பாகச் செயற்படாததே இந்தியாவுடனான இரண்டாவது ஒரு நாள் போட்டியில் தோல்வியடைய முக்கிய காரணம் என்று தென்னாபிரிக்க அணித் தலைவர் ஸ்மித் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: இந்த ஆடுகளத்தில் அடித்து ஆடுவது எளிதான காரியம் அல்ல. நாங்கள் சரியான பந்துகளைத் தெரிவு செய்து விளையாடவில்லை. எங்களது பந்து வீச்சு மற்றும் களத்தடுப்பு நன்றாக இருந்தது. ஆனால் முக்கியமான தருணத்தில் சிறப்பாக செயற்படவில்லை. இதில் நாங்கள் கவனம் செலுத்த வேண்டும். முனாப் பட்டேல் பந்து வீச்சு சிறப்பாக இருந்தது. நாங்கள் இந்த போட்டிக்கு மெத்தனமாக வரவில்லை. வெற்றி இலக்கை அடையமுடியாமல் போனது ஏமாற்றம் அளிக்கிறது.


## இன்று யாழ்ப்பாணம் வருகிறது பந்து

(யாழ்ப்பாணம்)

உலகக் கிண்ணப் போட்டிகளை பிரபல்யப்படுத்தும் வகையிலும், இலங்கை அணி வெற்றி பெறவேண்டி வலம் வரும் பந்து கையொப்பமிடும் ஊர்தி இன்று யாழ்ப்பாணம் வருகின்றது.

இலங்கையிலுள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் செல்லவுள்ள இந்தப் பந்து ஊர்தி, யாழ். மாவட்ட பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம், யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கம், வடமாகாண கிரிக்கெட் பயிற்றுவிப்பாளர் ரவீந்திர புஸ்பா குமார ஆகியோரின் ஒழுங்குபடுத்தலின் மூலம் இந்தப் பந்து கையெப்பமிடும் ஊர்தி இன்று யாழ்ப்பாணம் வரவுள்ளது.

காலை 9.00 மணியளவில் வேம்படி, யாழ். போதான வைத்தியசாலை சந்தியிலிருந்து ஊர்வலம் ஆரம்பமாகி, யாழ். மணிக்கூட்டு வீதியின் முன்பாக சென்றடையவுள்ளது. இங்கு வந்தடைந்தவுடன் பந்தில் கையெழுத்திடும் நிகழ்வு இடம்பெறும். இந்த நிகழ்வில், யாழ். மாவட்ட பாடசாலை கிரிக்கெட் சங்கம், யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கம், அதிபர்



கள், பயிற்றுவிப்பாளர்கள், பொறுப்பாசிரியர்கள் கலந்து கொண்டு பந்தின் மீது கையெழுத்திடவுள்ளனர்.

இதே வேளை, இந்த பந்துடன் 1996ஆம் ஆண்டு இலங்கை அணியால் கைப் பற்றப்பட்ட உலகக் கிண்ணமும் வலம் வருகின்றது. (எஸ்)

# பாகிஸ்தான் பேருந்தில் இடம்பெற்ற வெடிப்பில் பதினெட்டுப் பேர் பலி, ஒன்பது பேர் படுகாயம்



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் பெஷாவர் நகருக்கு அருகே சென்று கொண்டிருந்த பயணிகள் பேருந்தில் சக்தி வாய்ந்த வெடிப்புச் சம்பவத்தில் அதிலிருந்த 18 பேர் கொல்லப் பட்டதுடன் மேலும் 9 பேர் படுகாயமுற்றனர்.

கைபர் - பக்துன்குவா மாகாணங்களை இணைக்கும் ஹாங்கு என்ற நகருக்கு அருகே உள்ள அலிஜாய் ஜோசாரா என்ற இடத்தில் இச்சம்பவம் நடந்தது எனக் கூறிய பொலிஸார், பேருந்தில் ஏற்பட்ட வெடிப்பிற்கு காரணம் என்ன வென்று தெரியவில்லை என்று கூறினர்.

பி.ரி.ஐ. செய்தியாளரிடம் பேசியுள்ள மாவட்ட பொலிஸ் அதிகாரி அப்துர் ரிஷாத், பேருந்தில் கொண்டு செல்லப் பட்ட எரிவாயு தான் வெடித் ததாகத் தெரிவித்தார்.

ஆனால், மற்றொரு பொலிஸ அதிகாரி, இது பயங்கரவாதிக ளின் சதியாக இருக்கும் எனவும், பேருந்தில் குண்டு வைக்கப்பட்டிருக்கலாம் எனவும் கூறினார்.

பயணிகள் சென்ற பேருந்து ஒரு சரக்கு லொறி மீது மோதியபோதுதான் வெடிப்பு நிகழ்ந்ததாக அங்குள்ள மக்கள் சிலர் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பாகிஸ்தான் தகவல்கள் தெரி விக்கின்றன.




# வரலாறு காணாத பெரு வெள்ளத்தினால் அவுஸ்ரேலிய தென்மாகாணங்கள் பாதிப்பு

(கான்பரா)

அவுஸ்ரேலியாவின் வரலாற்றில் இல்லாத அளவிற்குத் தற்போது அதன் தென்பகுதி மாகா ணங்கள் வெள்ளத்தில் மிதக்க ஆரம்பித்து விட்டன. விக்ரோரியா மாகாணத்தில் 1,400 இற் கும் மேற்பட்ட வீடுகள், வெள்ளத்தில் மூழ்கி யுள்ளன. 3,500 இற்கும் மேற்பட்ட மக்கள் தங்கள் வசிப்பிடங்களை விட்டு வெளியேறியுள்ளனர். அவுஸ்ரேலியாவில், "லா நின" பருவநிலை மாறுபாட்டால் கடந்த 50 நாட்களுக்கும் மேலாக வரலாறு காணாத மழை மற்றும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இந்த வெள்ளத்தால் நாட்டின் வடபகுதி மாகாணமான குயின்ஸ்லாந்து மோசமாகப் பாதிக்கப்பட்டது. அம்மாகாணத்தில் வெள்ளத் திற்குப் பலியானோரின் எண்ணிக்கை 18 ஆக உயர்ந்துள்ளது. நாட்டின் மூன்றாவது பெரிய நகரும், மாகாணத் தலைநகருமான பிரிஸ்பேனில் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்ட குப்பை கள், 3 மீற்றர் உயரம், 3 மீற்றர் அகலத்தில் 100 மீற்றர் நீளப் பரப்பளவில் தேங்கியுள்ளன.

தற்போது, குயின்ஸ்லாந்து மீண்டு வரும் வேளையில், வெள்ளம் தெற்கு நோக்கிப் பாயத்



தொடங்கியுள்ளது. நியூசவுத் வேல்ஸ் மற்றும் விக்ரோரியா மாகாணங்கள் வெள்ளத்தில் மிதக் கின்றன.

நியூசவுத்வேல்ஸ் மாகாணத்தின் பல நகரங் கள் வெள்ளத்தால் துண்டிக்கப்பட்டு விட்டதால், ஆயிரக்கணக்கான மக்கள் வெளியுலகுடன் தொடர்புகொள்ள முடியாமல் தவித்து வருகின்ற னர். விக்ரோரியாவில், ஹோர்ஷாம் மற்றும் ரோச செஸ்டர் நகரங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. 1,400 வீடுகள் வெள்ளத்தில் மூழ்கிவிட்டன. 3500 பேர் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி முகாம்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

# வன்முறைச் சம்பவத்துடன் தொடர்புடைய ராணுவத்தினருக்கு 7 வருட சிறை விதிப்பு

(டாக்கா)

பங்களாதேஷ் நாட்டில் கடந்த 2009 ஆம் ஆண்டு நிகழ்ந்த கலவரத்தில் சம்பந் தப்பட்டார்கள் எனத் தெரி வித்து, 23 ராணுவத்தினருக்கு 7 வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

பங்களாதேஷின் வடக்கு தினாஷ்பூர் மாவட்டத் தில் புஸ்பரி என்ற இடத்தில் ராணுவ ஆயு தக்கிடங்கு உள்ளது.

அங்கு பணியில் இருந்த எல்லைப் பாது காப்புப் படை ராணுவ வீரர்கள் கலவரத்தில்



ஈடுபட்டனர். இதில் 57 ராணுவ அதிகாரிகள் உட்பட, 72 பேர் கொல்லப்பட்டனர்.

மேலும் அங்கிருந்த ஆயு தங்கள் கொள்ளையடிக்கப் பட்டன. இச்சம்பவம் கடந்த 2009 ஆம் ஆண்டு பெப்ரவரி 25 ஆம் திகதியும், 26 ஆம் திகதியும் நடந்தது. இது தொடர்பாக பல ராணுவ வீரர் கள் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் மீது பங்களா தேஷ் சிறப்பு நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிபதி குற்றம் சாட்டப்பட்ட ராணுவ வீரர்கள் 23 பேருக்கு தலா 7 ஆண்டுகள் சிறைத் தண் டனை விதித்து தீர்ப்பளித் தார்.

# நெல்சன் மண்டேலா உயிரிழந்ததாக தென்னாபிரிக்காவில் பரவிய வதந்தி



(ஜொகன்னஸ்பேர்க்)

தென்னாபிரிக்காவின் முன் னாள் ஜனாதிபதி நெல்சன் மண டேலா உயிரிழந்துவிட்டாரென வெளியான தகவலால் அந்நாட் டில் பரபரப்பும் பீதியும் ஏற்பட்ட துடன், அந்தச் செய்தி பொய் யெனப் பின்னர் தகவல் வெளியானதையடுத்து மக்கள் ஆறுதலடைந்தனர்.

நெல்சன் மண்டேலா இறந் தார் என்ற செய்தியை எவரும் நம்பவேண்டாமெனவும், அவர் சிறந்த உடல் நலத்துடன் உள்ளாரெனவும், விடுமுறையை மகிழ்ச்சியுடன் கழித்து வருகி றார் என தென்னாபிரிக்க அறக் கட்டளை நிதியம் தெரிவித்தது.

அத்துடன், குறித்த வதந் தியை நம்பவேண்டாம், மக்கள் அமைதியாக இருக்கவேண்டு மென அறக்கட்டளை செய்தித் தொடர்பாளர் ஷட்டாய் தெரி வித்தார். இதனையடுத்து தென்னாபிரிக்காவில் பதற்றம் குறைந்தது.



# குறள் சொல்லும் கதைகள் -24

## இன்பத்துப் பால்

## புதுமையான தீ

"விசரன் மாதிரிச் சிரிக்கிறாய். யாராவது கண்டால் விசரன் என்று சொல்லப் போகிறார்கள்" என்றான் நகுலன் .

"உயிர்கள் எல்லாவற்றையும் உற்று நோக்கிப் பார். எல்லோரும் விசரனைப் போல் தான் பலகருமங்களைச் செய்யினை. இந்த நாலைந்து நாட்களுக்குள் நீ எத்தனை விசர்க் கதை கதைச்சனி தெரியுமே. உளவியலாளர்கள் எல்லோருக்கும் உனக்கு கோளாறு குறிப்பிட்ட அளவிலை இருக்கென்று சொல்லினை" என்று கஜேந்திரன் கூறிக்கொண்டிருக்கையில் நகுலன், "உன்ரை விசர்க் கதையைக் கேட்கேலாது நான் போறன்" என்றார்.

"இப்ப உன்ரை விசருக்கு மருந்து என்னட்டைத் தான் இருக்கு" என்று சிரித்தான் கஜேந்திரன். அவனது பேச்சு விளங்காமையால் தடுமாறினான் நகுலன். என்ரை உதவியைத் தான் நீ நாடவேணும்."

"வெருட்டுறியே...? சரி வா போவம்" என்றான் நகுலன். இருவரும் கோயிலின் முன்பக்கம் வந்தனர். கஜேந்திரனது கண்கள் ஆவலோடு வித்தியாவைத் தேடி வெகுதூரம் சென்றன, "எந்தக் கடைக்குப் போனார்களோ தெரியாது. அவர்களைப் பின் தொடர்ந்து சென்றிருக்கலாம்" என்றான் கஜேந்திரன்.

"சரி இதிலை இரு" என்று கூறிவிட்டு நகுலன் முன் பக்கத்தில் பரவியிருந்த வெண் மணலில் அமர,கஜேந்திரன் அவனுக்கு அருகில் அமர்ந்தான்.

"நான் இவ்வளவு நாட்களும் வித்தியாவின் வீட்டுப் பக்கம் பயந்து பயந்து தனியத் தான் போனனான் இப்ப துணைக்கு நீ கிடைத்து விட்டாய்." என்றான் கஜேந்திரன்.

"வித்தியா எல்லாவற்றையும் சொல்ல முன்னம் அர்ச்சகா வந்திட்டாள்" என்றான் நகுலன்.

"வித்தியா நின்றபடியால் தான் அர்ச்சகாவை அருகில் நின்று பார்க்க உனக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது."

"காதலர்களுக்கு உதவி செய்வதற்கு கடவுள் யாராவது ஒருவரை ஏற்பாடு செய்து விடுவார். இதை நான் அனுபவத்திலை கண்டனான்" என்றான் கஜேந்திரன்

"நாங்கள் இதிலை வந்தும் ஒரு மணித்தியாலத்துக்கு மேலையாச்சு. இவை என்ன செய்யினை" என்று அலுத்துக் கொண்டான் நகுலன்.

"காதலிக்கிறவைக்குப் பொறுமை தான் முக்கியமாகத் தேவை. அது உனக்கு அணுவளவு கூட இல்லை. அழகு தேவதைகளை இலகுவாகச் சந்திக்க முடியாது. எவ்வளவோ சிரமப்பட வேண்டும். அதை விட பல நாட்களுக்குக் கூடக் காத்திருக்க வேண்டும். போன வருடம் ஆறு மாத காலமாக நான் வித்தியாவைச் சந்திக்கக் கஷ்டப்பட்டனான்" என்றான் கஜேந்திரன்.

நகுலன் திரும்பிப் பார்த்தான். தூரத்தில் அர்ச்சகாவும் வித்தியாவும் வந்து கொண்டிருந்தனர். நகுலனின் உள்ளம் ஆரவாரித்தது. "இரண்டு பேரும் வருகினை" என்றான் நகுலன்.

அர்ச்சகாவும் வித்தியாவும்,கஜேந்திரனும் நகுலனும் இருந்த இடத்திற்கு வந்தனர். "உந்த இரண்டு பொருட்களும் வாங்கவே இரண்டு மணித்தியாலம் செலவழித்தனீங்கள்" என்றான் கஜேந்திரன்.

"அர்ச்சகா கடைகளைப் பார்க்க விரும்பினாள். அது தான்" என்று வித்தியா சொல்லும் போது கஜேந்திரன் குறுக்கிட்டான். "இஞ்சையும் இரண்டு பேர் பார்க்கத் துடித்தவை..."

வித்தியா முறாய்த்துப் பார்த்தாள். அதைப் புரிந்து கொண்ட கஜேந்திரன், "நீர் வந்து கனநேரமாச்சு அம்மாவை யார் பார்க்கிறது" என்றான்.

"ஓ அதை நான் மறந்திட்டன் வா, உள்ளுக்குப் போய்க் கும்பிட்டுட்டுப் போவம்" என்று புறப்பட்டாள் வித்தியா.

அர்ச்சகா நகுலனைப் பார்த்து நளினமாகச் சிரித்தாள்.

நகுலனுக்கு மின்னல் தாக்கியதைப் போல இருந்தது.

வித்தியா செல்வதை ஏக்கத்துடன் பார்த்துக்கொண்டு நின்றான் கஜேந்திரன். அவளது உடல் தீப் பற்றி எரிவதைப் போல இருந்தது.

"என்னடா சோகமாய் இருக்கிறாய்? எனக்கு இன்றைக்குத் தான் மகிழ்வான நாள்" என்றான் நகுலன்.

"வித்தியாவைக் காணாவிட்டால் எனது உடல் தீப்பற்றி எரிகிறது. அவள் அருகில் இருந்தால் குளிரூட்டிய அறையுள் இருப்பதைப் போல் உடல் குளிர்கிறது. இத்தகைய புதுமையான தன்மையை இவள் எங்கிருந்து பெற்றாளோ தெரியவில்லை. நான் கஷ்டப்படுகிறேன்" என்றான் கஜேந்திரன்.

**கே.வி.குணசேகரம்**

நீங்கின் தெறூ உம் குறுகும்கால் தண் என்னும்
தீயாண்டுப் பெற்றாள் இவள்

(குறள் - 1104)

அவளை விட்டு நீங்கினால் சுடுகிறது. அவளை நெருங்கிச் சென்றால் குளிர்ச்சியாக இருக்கிறது. இத்தகைய புதுமையான தீயை இவள் எங்கிருந்து பெற்றாள்.

# ஆங்கில படத்துக்கு இசை அமைத்த ரகுமானுக்கு அமெரிக்க திரைப்படவிருது

(புதுடெல்லி)

**இசை அமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமானுக்கு அமெரிக்க திரைப்பட விருது கிடைத்துள்ளது. தமிழகத்தைச் சேர்ந்த இசை அமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமான். 27 அவர்ஸ் என்ற ஆங்கிலப்படத் துக்கு இசை அமைத்து இருந்தார். இந்தப் படத்தில் இப் ஐ ரைஸ் என்ற பாடலை ரகுமான் இசையில் பாப்பாடகர் டிடோ பாடியிருந்தார். இந்தப் பாடலுக்கு இசை அமைத்ததற்காக ரகுமானுக்கு அமெரிக்காவின் திரைப்பட விருது கிடைத்துள்ளது.**



அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் உள்ள பிலிம் கிரிடிக்ஸ் அசோசியேசன் சார்பில் 'சாய்ஸ் மூவி' என்ற விருது வழங்கப்பட்டுள்ளது. தி சோசியல் நெட் ஒர்க் என்ற படத்துக்கு சிறந்த படத்துக்கான விருதும், அந்த படத்தின் இயக்குனர் டேவிட் பின் செருக்கு சிறந்த இயக்குனர் விருதும், தி கிங்ஸ் ஸ்பீக் படத்தில் நடித்த கோவிலின் பிர்த்துக்கு சிறந்த நடிகர் விருதும், கிளாக் ஸ்வேன் படத்தில் நடித்த நாலி போர்ட் மேனுக்கு சிறந்த நடிகைக்கான விருதும் கிடைத்துள்ளது.

விருது வழங்கும் விழா ஆலிவுட்டில் நடந்தது. இதில் ஏ.ஆர்.ரகுமான் மற்றும் சிறந்த கலைஞர்களுக்கு விருது வழங்கப்பட்டது. ஏ.ஆர்.ரகுமான் ஏற்கனவே உலகின் மிக உயரிய விருதான ஆஸ்கார் விருதுகளைப் பெற்றுள்ளார். ஸ்லம் டாக் மில்லியனர் படத்துக்கு இசை அமைத்ததற்காக 2 ஆஸ்கார் விருதுகள் அவருக்கு கிடைத்தன. லண்டனில் அவருக்கு கிராமி விருதும் வழங்கப்பட்டது. தற்போது லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் உள்ள திரைப்பட அமைப்பு விருது வழங்கி உள்ளது.

# உணவுப்பொருட்களின் விலைகள் குறைவாக உள்ளது என்கிறார் பவார்



வெளிநாடுகளை ஒப்பிட்டுப் பார்த்தால், இந்தியாவில் உணவுப் பொருட்களின் விலை குறைவாகத்தான் இருக்கிறது என்று மத்திய விவசாயத்துறை அமைச்சர் சரத் பவார் கூறினார்.

மராட்டிய மாநிலம் புனேயை அடுத்த மன்சாரில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட அவர் செய்தியாளர்களிடம் பேசுகையில்,

நாட்டில் அத்தியாவசியப் பொருட்களின் விலையும், பணவீக்கமும் அதிகரித்து வருகிறது. இதுபற்றி பிரதமர் மன்மோகன்சிங், நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி ஆகியோர் பங்கேற்ற கூட்டத்தில் பங்கேற்றேன்.

விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த வேண்டியது அனைத்து துறை அமைச்சர்களின் பொறுப்பாகும். விலை உயர்வுக்கு விவசாயத்துறையை குற்றம் சாட்ட முடியாது. அனைத்து அமைச்சர்களும் கூட்டாக செயல்பட்டு விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த வேண்டும். மாநில வாரியாக விவசாய உற்பத்தியை கணக்கிட்டு வருகிறோம். இதில் எங்கள் துறை திருப்தியாக செயல்பட்டு இருக்கிறது. என அவர் மேலும் தெரிவித்தார்.

# எடியூரப்பா தனது பதவியிலிருந்து விலகி தேர்தலைச் சந்திக்க முன்வர வேண்டும்

## காங்கிரஸ் கோரிக்கை


(புதுடெல்கி)

எடியூரப்பா உடனடியாக பதவியை விலக்கிவிட்டு தேர்தலைச் சந்திக்க முன்வர வேண்டும் என காங்கிரஸ் தலைவர் பரமேஸ்வர் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய அவர் கர்நாடக பா.ஜனதா அரசு சட்ட வி[illegible]ாத செயல்களில் ஈடுபட்டு வருகிறது. தகுதிநீக்கம் செய்யப்பட்ட 16 எம்.எல்.ஏ.க்களில் 11 பேர் தொடர்ந்த வழக்கு சுப்ரீம் கோர்ட்டில் உள்ளது. 5 பேர் வழக்கு ஐகோர்ட்டில் உள்ளது. இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட எம்.எல்.ஏ.க்களுக்கு ஆதரவாக தீர்ப்பு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அவர்கள் மீண்டும் சட்டசபை கூட்டத்துக்கு வருவார்கள் என்ற நம்பிக்கை உள்ளது. இதனால் அரசுக்கு ஆபத்து ஏற்படும் என்று முதல்வர் எடியூரப்பாவுக்கு பயம் ஏற்பட்டு உள்ளது.

இதற்கு மாற்று ஏற்பாடாக எதிர்க்கட்சிகளை சேர்ந்த 15 எம்.எல்.ஏ.க்களை சஸ்பெண்டு செய்யுமாறு அப்பச்சு ரஞ்சன் கமிட்டி அறிக்கை தாக்கல் செய்து உள்ளது. எதிர்க்கட்சியினர் இல்லாத நேரத்தில் இந்த அறிக்கை சட்டசபையில் தாக்கல் செய்யப்பட்டு உள்ளது. மேலும் அறிக்கையின் மீது சபாநாயகர் நடவடிக்கை எடுக்கும்படி தீர்மானமும் கொண்டு வரப்பட்டு உள்ளது. எதிர்க்கட்சி எம்.எல்.ஏ.க்கள் சட்டசபையில் இல்லாத நேரத்தில் இவ்வாறு தீர்மானம் கொண்டு வந்து இருப்பது சட்டவிரோதமானது.

தகுதியிழப்பு செய்யப்பட்ட 16 எம்.எல்.ஏ.க்களின் வழக்கில் சம்பந்தப்பட்டவர்களுக்கு சாதகமாக தீர்ப்பு வெளியானால் உடனடியாக எதிர்கட்சி எம்.எல்.ஏ.க்கள் 15 பேரை சஸ்பெண்டு செய்ய முன்னேற்பாடுகள் நடந்து வருகிறது.



இவ்வாறு அரசியலமைப்பு சட்டத்துக்கு எதிராக செயல்பட்டு வரும் முதல்வர் எடியூரப்பா ஒரு நிமிடம் கூட பதவியில் நீடிக்க தகுதியற்றவர். அவர் உடனடியாக பதவியை ராஜினாமா செய்து விட்டு தேர்தலை சந்திக்க முன்வர வேண்டும் என்றார்.

# எதிர்வரும் சட்டமன்றத் தேர்தலின்பின் கருணாநிதியின் ஆட்சி இருக்கமாட்டாது

(புதுடெல்கி)

தமிழகத்தில் 2011 சட்டசபை தேர்தலுக்குப் பின் கருணாநிதியின் ஆட்சி போவது உறுதி,அ.தி.மு.க.,ஆட்சி மலர்வது நிச்சயம். கருணாநிதியிடம் இருந்து தமிழத்தை மீட்க எம்.ஜி.ஆர்., அவதரித்தார். 3 முறை தமிழக முதல்வராக இருந்த அவர் தமிழகத்தை கருணாநிதியிடம் இருந்து காப்பாற்றினார். நானும் இரண்டு முறை கருணாநிதியிடம் இருந்து தமிழக மக்களை காப்பாற்றினேன். மறைந்த முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆரின் பிறந்தநாளையொட்டி இன்று அ.தி.மு.க தலைமை அலுவலகத்துக்கு வந்த ஜெயலலிதா, அங்குள்ள எம்.ஜி.ஆரின் உருவச்சிலைக்கு மாலை அணிவித்து பிறந்த நாள் சிறப்பு மலரை வெளியிட்டார்.

மலரை வெளியிட்ட பின்னர் பேசிய ஜெயலலிதா,மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,



2006ஆம் ஆண்டு தேர்தலில் துரதிர்இடவசமாக தோல்வியுற்றேன். அதன் பிறகு தமிழக மக்கள் கோரப்பிடியில் சிக்கி தவிக்கின்றனர். விலைவாசி உயர்வு, மின்வெட்டு, மின் கட்டண உயர்வு, என பல்வேறு துன்பங்களில் மக்கள் சிக்கி தவிக்கின்றனர்.

வரும் சட்டசபை தேர்தலில் அ.தி.மு.க., வெற்றி பெறும்.

தமிழகத்தில் லஞ்சம், ஊழல் அதிகரித்துவிட்டது. சட்டம், ஒழுங்கு சீர்குலைந்துவிட்டது.

மீண்டும் எம்.ஜி.ஆர் ஆட்சி அமைவது காலத்தின் கட்டாயம். எம்.ஜி.ஆர் ஆட்சி அமைத்த பிறகு,வெற்றி விழாவில் உங்களை எல்லாம் சந்திக்கிறேன் என்றார்.




# புதிதாக 91 கடவுச்சீட்டு மையங்கள் அமைப்பு வெளிவிவகார அமைச்சர் கிருஸ்ணா தகவல்

(புதுடெல்கி)



கடவுச்சீட்டு வழங்குவதை துரிதப்படுத்தும் வகையில், புதிதாக 91 கடவுச்சீட்டு சேவை மையங்கள் திறக்கப்படும் என்று மத்திய அமைச்சர் கிருஷ்ணா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய மத்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா கூறியதாவது,

நாட்டில் ஐந்து கோடி பேர் கடவுச்சீட்டு வைத்துள்ளனர். ஆண்டுதோறும் 50 லட்சம் கடவுச்சீட்டுகள் வழங்கப்படுகின்றன. கடவுச்சீட்டு வேண்டி விண்ணப்பித்தவர்களுக்கு விரைவாக வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நாடு முழுவதும், வெளியுறவு அமைச்சகத்தின் கீழ், 37 கடவுச்சீட்டு வழங்கும் அலுவலகங்கள் செயல்படுகின்றன. இவை அனைத்தும், உலக தரத்தில் செயல்படுகின்றன. ஆனால், கடவுச்சீட்டு வழ்ங்குவதில் ஏற்படும் தாமதத்திற்கு, கடவுச்சீட்டு அலுவலங்கள் முக்கிய காரணமல்ல.

முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள், விண்ணப்பதாரர் குறித்த விவரங்களை சேகரித்து அனுப்புவதில் பொலிஸாரின் தாமதம் ஆகியவை முக்கிய காரணங்களாக உள்ளன.

இவற்றுக்கு தீர்வு காணும் வகையில், கடவுச்சீட்டு அலுவலகங்களில் வாரந்தோறும் சனிக்கிழமை, குறைதீர் முகாம் நடத்தப்படுகின்றன. மேலும், கடவுச்சீட்டு வழங்குவதை விரைவுப்படுத்தும் வகையில், பெங்களூரு, சண்டிகர் உள்ளிட்ட இடங்களில் கடவுச்சீட்டு சேவை மையங்கள் (பி.எஸ்.கே.,) செயல்படுகின்றன. தவிர,77 புதிய கடவுச்சீட்டு சேவை மையங்களும், 14 சிறிய கடவுச்சீட்டு சேவை மையங்களும் திறக்க முடிவு செய்யப் பட்டுள்ளது. இதில்,தமிழகம்,ஆந்திரா,கேரளா ஆகிய மாநிலங்களில் 25 கடவுச்சீட்டு சேவை மையங்கள் திறப்பதற்கான பணிகள் நிறைவடைந்துள்ளன. புதிய சேவை மையங்கள் திறக்கப்பட்டால், நாடு முழுவதும் கடவுச்சீட்டு வழங்கும் மையங்களின் எண்ணிக்கை 1,250 ஆக உயரும் என்றார்.

# இசையமைப்பாளர் இளையராஜாவுக்கு வழங்கப்படுகிறது சுப்புலட்சுமி விருது

(சென்னை)

தமிழக அரசின் கலை பண்பாட்டுத்துறை சார்பில் பாரதி விருது ஜெயகாந்தனுக்கும், எம்.எஸ்.சுப்புலட்சுமி விருது இளையராஜாவுக்கும், பால சரசுவதி விருது பத்மா சுப்ரமணியனுக்கும் வழங்க முதல்வர் கருணாநிதி ஆணையிட்டுள்ளார்

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்,

2007-2008ஆம் ஆண்டிற்கான சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை மானியக் கோரிக்கை மீது தமிழக சட்டப்பேரவையில் 7.5.2009 அன்று நடைபெற்ற விவாதத்தின்போது தமிழகத்தைச் சேர்ந்த கலைஞர்களுக்கு கலைமாமணி போன்ற விருதுகள் வழங்கப்படுவது போல, அகில இந்திய அளவில் புகழ்பெற்ற கலைஞர்களுக்கும், இலக்கியவாதிகளுக்கும் விருதுகள் வழங்கப்படுமெனத் தமிழக அரசு சார்பில் அறிவிக்கப்பட்டது.



அந்த அறிவிப்பினைச் செயல்படுத்தும் முகமாகத்தான், இயல் துறையில் சிறந்து விளக்கும் ஒருவருக்கு பாரதி விருது, இசைத் துறையில் சிறந்து விளங்கும் ஒருவருக்கு எம்.எஸ்.சுப்புலட்சுமி விருது, நாட்டியக் கலையில் சிறந்து விளங்கும் ஒருவருக்கு பாலசரசுவதி விருது என மூன்று விருதுகளை ஆண்டுதோறும் வழங்கிட முதல்வர் கருணாநிதி ஏற்கனவே ஆணையிட்டிருந்தார்.

அந்த ஆணையின்படி முதல் முறையாக இந்த ஆண்டில், இயல் துறையில் சிறந்த எழுத்தாளராகிய த.ஜெயகாந்தன் அவர்களுக்கு பாரதி விருது வழங்கிடவும், திரை இசைக் கலையில் தனி முத்திரை பதித்துள்ள இளையராஜா அவர்களுக்கு எம்.எஸ். சுப்புலட்சுமி விருது வழங்கிடவும், நாட்டியக் கலையில் புகழுடன் திகழும் டாக்டர் பத்மா சுப்பிரமணியம் அவர்களுக்கு பாலசரசுவதி விருது வழங்கிடவும், இந்த விருதுகளைப் பெறும் பெருமக்கள் ஒவ்வொருவருக்கும் தலா ஒரு லட்சம் ரூபாய் விருதுக்குரிய பொற்கிழியாக வழங்கிடவும் முதல்வர் கருணாநிதி ஆணையிட்டுள்ளார். இவ்வாறு அரசு செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது

# பழமொழி கூறும் பொருளியல் உண்மைகள்

**கொழும்பில் நடைபெற்ற தமிழர் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுரை**

## ஆய்வின் தோற்றம்

இற்றைக்கு சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன் கலாநிதிப் பட்டம் பெறுவதற்காக இலங்கை முஸ்லிம்களின் மதநம்பிக்கைகளும் பொருளாதார நடவடிக்கைகளும் என்ற தலைப்பில் ஓர் ஆய்வினை மேற்கொண்டிருந்தபோது இலங்கையின் 1901 ஆம் 1911 ஆம் ஆண்டுகளின் சனத்தொகை கணக்கெடுப்பைப் பற்றி முறையே பொன்னம்பலம் அறிக்கைகளைப் புரட்டினேன். அவற்றில் அவ்விரு காலகட்டங்களிலும் இலங்கை மக்களின் தொழிற் பிரிவுகள் அவர்களின் அன்றாட வாழ்க்கைமுறை, அவர்களின் பழக்கவழக்கங்கள், மற்றும் பல்லினச் சமூகங்களின் நிலை போன்றவற்றைப் பற்றிய விவரங்களில் அக்காலத்தே வழக்கிலிருந்த தமிழ், சிங்களப் பழமொழிகளைப் பெரிதும் கையாண்டு பல உண்மைகளை நிறுவியிருந்ததை அறிந்தேன். சமூகவியல், பொருளியல் ஆகிய துறைகளில் தத்துவார்த்தமான உண்மைகளைச் சாதாரண பழமொழிகள் மிக இலகுவாகப் படம்பிடித்துக் காட்டுவதையும் அப்போதுணர்ந்தேன்.

ஆகவே பொருளியற் தத்துவங்களுக்கு ஆதாரமாகப் பழமொழிகளை உபயோகிப்பதைவிட பழமொழிகளைக் கொண்டு பொருளாதார உண்மைகளைக் கொண்டு பொருளாதார உண்மைகளை நிறுவமுடியுமா என்ற கேள்வி என் எண்ணத்தில் அப்போது எழுந்தது. அந்த எண்ணத்தின் அடிப்படையில் எழுந்ததே இச்சிறு கட்டுரை. பொருளியலைத் தமிழிற் கற்கும் பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வு முயற்சிகளுக்கு இக்கட்டுரையின் கருத்துக்கள் ஓர் அறிமுகமாக உதவலாம்.

## பழமொழிகள் எப்போது எங்கே உருவாகின?

இலக்கியங்கள் சமூகச் சூழலின் பிம்பமாகவோ எதிர்ப்பிம்பமாகவோ உதிக்கும் என்பதையும், அவை மக்களின் வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் கண்ணாடி என்பதையும் யாரும் இன்று மறுப்பதற்கில்லை. பழமொழிகளும் ஒருவகை இலக்கியப்படிவமே. அவை சாதாரண மக்களின் நாவிலேயே பெரும்பாலும் குடியிருப்பதால் அவை அம்மக்களின் அன்றாட வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்துள்ளன என்பதையும் மறுக்க முடியாது. இருந்தும் இன்றைய பழமொழிகள் நேற்றைய புதுமொழிகள் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு சமூகத்திலும் ஒவ்வொரு காலப்பகுதியிலும் மக்களிடையே நிலவும் நடைமுறைகளையும் பழக்கவழக்கங்களையும், சம்பிரதாயங்களையும் கூர்ந்து அவதானித்த அனுபவசாலிகளும், புத்திஜீவிகளும் அவர்கள் அவதானித்த உண்மைகளைப் பாமரரும் விளங்கிக் கொள்ளும் வண்ணம் நாலிரண்டு வார்த்தைகளில் அச்சொட்டாக நறுக்கெனச் சொல்லி வைப்பர். அவவாறு அவர்கள் சொன்னதைத் தொடர்ந்து பலரும் மீண்டும் மீண்டும் சந்தர்ப்பங்களுக்கேற்ப ஓர் உவமானம் போற் கூறிவர அவை நாளடைவிற் பழமொழி அல்லது முதுமொழி என்ற உருவைப் பெற்றுச் சந்ததி சந்ததியாக முதலிற் பேச்சு வழக்கிலும் பின்னர் எழுத்திலும் இடம்பெற்று விடும். (இவ்வாறே சமூகத்தில் சிலருக்குக் காரணப் பெயர்களாகச் சூட்டப்படும் பட்டப் பெயர்களும் பரம்பரை பரம்பரையாக நிலைபெறுவது உண்டு. ஆகவே பழமொழிகள் ஒரு குறிப்பிட்ட சமூகச் சூழலில் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் உருவாகிய புதுமொழிகள் என்பதை நாம் முதலில் உணரவேண்டும். பழமொழிகள் பழமொழிகளாகவே என்றும் உதயமாகவில்லை.



**பொன், வெள்ளி ஆபரணங்களைக் கொண்டு பெண்களை அலங்கரிப்பது தமிழர் பண்பாட்டின் தலைமையான ஒரு சம்பிரதாயம். இலங்கையிலும் சிங்கள, தமிழ், முஸ்லிம் ஆகிய மூன்று முக்கிய இனத்தவர்களும் இச்சம்பிரதாயத்தை இன்றுவரை கடைப்பிடித்து வருவதை நாம் மறுப்பதற்கில்லை. திருமண வேளைகளில் திருமணப் பெண்ணை பொற்சிலையாகவே அப் பெண்ணைப் பெற்றோர் மாற்றிவிடுவர் என்றால் அது மிகையாகாது. மேலும் பொன் ஆபரணங்களை இறைவனுக்காக அர்ப்பணித்துக் கோயில் உண்டியல்களிலே பக்தர்கள் கொண்டுபோய்க் கொட்டுவதையும் நாம் அறிவோம். இவ்வாறு கஷ்டப்பட்டு உழைத்த செல்வத்தை நகைகளாக உருக்கி அழகு பார்ப்பதைப் பொருளியல் வரவேற்பதில்லை.**

இருப்பினும் பழமொழிகளின் காலவரையறையை நிர்ணயிப்பது மிகவும் கடினம். உதாரணமாக மிகவும் தொன்மையான ஓர் ஆவணச் சுவடியில் ஒரு பழமொழி காணப்படுமானால் அப்பழமொழி அச்சுவடி காட்டும் காலத்தை விடப் பழமையானது என்பதே உண்மை. அது மட்டுமல்ல, ஒரு பழமொழியின் உரிமையாளன் யார் என்பதையும் அறிவது இயலாத ஒரு காரியம். ஏடறியா இலக்கியங்கள் போன்று பழமொழிகளும் பிறப்பறியாக் குழந்தைகள். இவற்றின் காரணமாகவே பல்துறை அறிவியல் ஆய்வாளர்கள் தமது நிரூபணங்களுக்கும், வாதப்பிரதிவாதங்களுக்கும் பழமொழிகளைப் பிரதான ஆதாரங்களாகக் காட்டாமல் அவற்றை உப ஆதாரங்களாகவே மேற்மோள் காட்டுவர்.

சில பழமொழிகள் பலவேறு மொழிகளைப் பேசுவோர் மத்தியிலும் புளக்கத்தில் இருப்பதையும் நாம் உணரலாம். உதாரணமாக, தமிழிலே "பழகப் பழகப் பாலும் புளிக்கும்" என்பதற்கு ஈடாக ஆங்கிலத்துடன் familiarity breeds contempt"என்றும் "பல மரம் கண்ட தச்சன் ஒரு மரமும் வெட்டான்" என்பது போன்ற ஆங்கிலத்தில் [Jack of all trades is master ofnone] என்றும் ஒரே கருத்துள்ள பழமொழிகள் பல இன மக்களிடையே பல்வேறு மொழிகளிற் பேசப்படுவதை நாம அறிவோம். இதிலிருந்து அறிவதென்னவெனில் மனித வாழ்வில் உணரப்படும் எத்தனையோ உண்மைகள் ஓர் இனத்துக்க மட்டும் சொந்தமானவையல்ல. மாறாக அவை உலகத்துக்கே சொந்தமானவை என்பதாகும். பொருளியல் புகட்டும் உண்மைகளும் அவ்வாறானவையே.

## பொருளியற் தத்துவங்கள்

பொருளியல் ஆராயும் பிரச்சினைகளும் அப்பிரச்சினைகள் தோற்றுவிககும் வினாக்களும் மனிதப் பிறவி ஆரம்பமாகிய காலந்தொடக்கமே இருந்து வந்துள்ளன என்பதை ஏற்றுக்கொண்டால் பொருளியலின் தோற்றத்தை அதம் சுமித்தின் 18 ஆம் நூற்றாண்டு வெளிவந்த "தேசங்களின் வளம்" (Wealth of Nations) என்ற நூலுடன் ஆரம்பிப்பது பொருத்தமுடையதன்று எதை, எப்படி, யாருக்காக உற்பத்தி செய்வது என்ற பொருளியலின் அடிப்படை வினாக்கள் மூன்றிற்கும் மனிதப் பிறவி அதன் தோற்றக் காலத்திலிருந்தே விடைகாண முயன்று வந்துள்ளது.

அந்த முயற்சியின் விளைவாகப் பல உண்மைகளை மனித இனம் காலத்துக்குக் காலம் உணர்ந்து வந்தே இருக்கும் என்பதை நாம் மறுக்க முடியாது. அந்த உண்மைகள் எழுத்திலே வடிக்கப்படாதிருப்பினும், பேச்சு வழக்கிலே பழமொழிகளாகவும், கவிதைகளாகவும் பல சமூகங்களில் நிலவி வந்திருக்கலாம். இந்த உண்மையை ஜோன் கெனத் கல்பிறைத் (1906 - 2006) என்ற அமெரிக்கப் பொருளியற் பேராசிரியர் ஒரு சிறு உதாரணத்தைக் கொண்டு தனது "பொருளியல் வரலாறு" (A History of Economics, Hamish Hamilton london. 1987), என்ற நூலில் விளக்கு கிறார். "கலப்பட நாணயம் நல்ல நாணயத்தைத் துரத்திவிடும்" (bad money chases good) என்ற உண்மை கிறஷாம்

விதியென்று பொருளியலிற் போற்றப்படுகின்றது.

அதாவது வெள்ளியும் பொன்னும் நாணயங்களாகப் புளக்கத்திலிருந்த காலத்தில் பசும்வெள்ளி, பசும்பொன் நாணயங்களுக்கு மத்தியில் கலப்பட வெள்ளியினாலும் கலப்படப் பொன்னினாலும் உருவாக்கப்பட்ட நாணயங்கள் புளக்கத்துக்கு வந்து அவை பொருளாதாரப் பரிவர்த்தனையில் ஏற்றக் கொள்ளப்படுமானால் நல்ல நாணயங்கள் விரைவில் ஓடி ஒளிந்துவிடும். இந்த உண்மையை முதலிற் கண்டுபிடித்தவர் இங்கிலாந்தில் முதலாம் எலிசபெத் மகாராணி ஆட்சிக்காலத்தில் வாழ்ந்த தோமஸ் கிறஷாம் என்று பொருளியல் வரலாற்று நூல்கள் கூறுகின்றன.

ஆனால் பொன், வெள்ளி நாணயங்கள் இங்கிலாந்தில் மட்டுமல்ல வேறு பல உலக நாடுகளிலும் புளக்கத்தில் இருந்து வந்துள்ளன. அவ்வாறாயின் அந்த நாடுகளில் இந்த உண்மை எலிசபெத் மகாராணியின் காலம் வரை உணரப்படவில்லையா? நிகோல் ஒறெஸமே (1323 - 1382) என்ற ஒரு பிரெஞ்சுப் பாதிரி கிறஷாமுக்கு இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னரே இவ்வுண்மையை உணர்ந்துள்ளாரெனக் கல்பிறைத் கூறுகிறார்.

இந்த உண்மையை மேலும் ஆராய்ந்தால் ஒறெஸ்மே பிறந்த ஐந்து வருடங்களின் பின் மரணித்த இப்னு தைமிய்யா (1268 - 1328) என்னும் சிரிய நாட்டு ஓர் இஸ்லாமிய அறிஞன் இதே உண்மையை உணர்ந்து நாணயங்களின் பெறுமதியைப் பாதுகாப்பதே ஓர் அரசாங்கத்தின் பிரதான கடமையென்றும், பெறுமதியற்ற நாணயங்களைப் புளங்கவிட்டாற் பெறுமதியுள்ள நாணயங்கள் மறைந்துவிடு மென்றும் தனது கலீபா மன்னனுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது இன்றைய நிதிக்கொள்கைப் பொருளியலாளர்களும். மத்திய வங்கி ஆளுனர்களும் பேசுவது போற் தோன்றவில்லையா? ஆகவே கல்பிறைத் கூறுவது போன்று "யாரும் கண்டு பிடிப்பதற்காகப் பொருளியல் விதிகள் காத்துக் கிடப்பதில்லை." அவை கூறும் உண்மைகள் எல்லா மக்களாலும் எல்லா இனங்களிலும் உணரப்படுபவையே.

"கலப்பட நாணயம் நல்ல நாணயத்தை துரத்திவிடும். என்பதும் ஒரு பொருளியல் விதியல்ல, பலரும் பல நாடுகளிலும் அனுபவத்தில் உணர்ந்த ஓருண்மை முதுமொழிபோல் ஆங்கிலத்தில் இடம்பெற்றுள்ளது. "தாய்ப் பொன்னிலும் மாப்பொன்னெடுக்கிற தட்டான்" என்று கடந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்தில் நிலவிய பழமொழியொன்று கலப்பட நகைகளைப் பற்றிக் குறிப்பிட்டாலும் பொன் நாணயங்கள் புளக்கத்திலிருந்த காலத்தில் அதே தட்டான் என்ன செய்திருப்பான் என்பதைப் பற்றியும் அதனால் பொன் நாணயங்களுக்குத் தமிழர் மத்தியிமல் என்ன நடந்திருக்கும் என்பது பற்றியும் நம்மைச் சிந்திக்க வைக்கிறது. ஆகவே தமிழினச் சூழலில் கிறஷாம் விதி தட்டான் விதியாக இருந்திருக் கலாமெனவும் ஊகிக்கத் தூண்டுகிறது.

## இலங்கைத் தமிழப் பழமொழிகளும் பொருளாதார உண்மைகளும்.

இலங்கையின் பொருளாதார வரலாற்றில் பத்தொன்பதாம் நூற்றாண்டு மிகப்பெரும் மாற்றங்களைக் கண்ட ஒரு காலப்பகுதி. பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை கோப்பியுடன் ஆரம்பித்துப் பினனர் சிங்கோனா. தேயிலை, இறப்பர், தென்னை என்றவாறு தொடர்ந்து அதன் விளைவாகப் பேக்குவரத்து வசதிகள் முன்னேற்றமடைந்து பட்டணங்கள் பெருகி அதிகமான மக்களின் வாழ்க்கை வசதிகளும் வருவாய்களும் உயர்ந்தனவென்பது இன்று எல்லோரும் அறிந்த உண்மை.

குறிப்பாக அந்த நூற்றாண்டின் இறுதிக் காற்பகுதியும் இருபதாம் நூற்றாண்டின் முதற் காற்பகுதியும் சாதாரண மக்களின அன்றாட வாழ்க்கையிற் பல மாற்றங்களைக் கண்டனர். இந்த மாற்றங்களையும் சில பொருளியல் உண்மைகளையும் அப்போது வழக்கிலிருந்த தமிழ்ப் பழமொழிகள் அப்படியே படம் பிடித்துக் காட்டுகின்றன.

பொன், வெள்ளி ஆபரணங்களைக் கொண்டு பெண்களை அலங்கரிப்பது தமிழர் பண்பாட்டின் தலைமையான ஒரு சம்பிரதாயம். இலங்கையிலும் சிங்கள், தமிழ், முஸ்லிம் ஆகிய மூன்று முக்கிய இனத்தவர்களும் இச்சம்பிரதாயத்தை இன்றுவரை கடைப்பிடித்து வருவதை நாம் பறுப்பதற்கில்லை.

திருமண வேளைகளில் திருமணப் பெண்ணை பொற்சிலையாகவே அப் பெண்ணைப் பெற்றோர் மாற்றிவிடுவர் என்றால் அது மிகையாகாது. மேலும் பொன் ஆபரணங்களை இறைவனுக்காக அர்ப்பணித்துக் கோயில் உண்டியல்களிலே பக்தர்கள் கொண்டுபோய்க் கொட்டுவதையும் நாம் அறிவோம். இவ்வாறு கஷ்டப்பட்டு உழைத்த செல்வததை நகைகளாக உருக்கி அழகு பார்ப்பதைப் பொருளியல் வரவேற்பதில்லை.

குறைவிருத்தி நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு முதலீட்டுப் பற்றாக்குறையே முக்கிய காரணமென்று பொருளியல் வல்லுநர்கள் அன்றும் இன்றும் கூறுகின்றனர். அந்தக் கூற்றை நிறுவுவதற்காக எத்தனையோ பொருளியல் மாதிரிகள் (Econmic models) கணித வடிவாகவும் வரைவு வடிவாகவும் வெளிவந்து பொருளியற் புத்தகங்களையும் ஆய்வுக் கட்டுரைகளையும் அலங்கரிக்கின்றன.

*(நாளை தொடரும்...)*

கலாநிதி அமீர் அலி
மேற்கு அவுஸ்திரேலியா

# திரும்பிய அமைதியை விரும்பிய திசையில் நகர்த்திச் செல்ல...



# ஜனாதிபதியினதும், எங்களினதும் இணைந்த கரங்கள்தான்....

உரைநிகழ்த்தியபோதே மேற் கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரைநிகழ்த்தும் போது - சூரியப்பொங்கல் காண எழுச்சியுற்று வந்திருக்கும் எம் இனிய உறவுகள் அனைவருக்கும் வணக்கம்!

இன்றைய தினம் ஒரு வீரிய தினம்!

இது உலகத்திற்கு உணவு படைக்கும் உழைக்கின்ற மக்களான-

உழவர்கள் கொண்டாடி மகிழும் திருநாள் மட்டுமல்ல,

சூரியனுக்கு நன்றி தெரிவித்து, சூரிய வணக்கம் செலுத்தும்

சூரியப்பொங்கல் தினம் மட்டுமல்ல.

இது ஒரு தேசியப்பொங்கலாகவும் இருக்க வேண்டும் என்று கருதியே எமது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களின் நேசக்கரத்தை பற்றிப்பிடித்து உங்களிடம் அவரை அழைத்து வந்திருக்கின்றேன்.

உங்களுக்கு சேவை செய்யும் கரங்களை கொண்டவர்களே இந்த அரங்கத்தில் இருக்கின்றார்கள்.

கௌரவ ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்கள், ஜனாதிபதி அவர்களின் செயலாளர் நண்பர் லலித் வீரதுங்க அவர்கள், வட மாகாண ஆளுநர் திரு சந்திரசிறி அவர்கள்,

எமது நாடாளுமன்ற உறுப்பினர்களான அசோக் சந்திரகுமார் அவர்கள், உதயன் சில்வேஸ்த்திரி அலென்ரின் அவர்கள்,

யாழ் மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமார் அவர்கள், யாழ். மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா அவர்கள்,

யுத்த படைகளாக இல்லாமல் மக்கள் பாதுகாப்புப் படையாக மாறி மக்களின் விருப்பங்களுக்கு ஒத்திசைவாக செயலாற்ற விரும்பும் படைத்தளபதிகள் மற்றும் கட்டளைத்தளபதிகள் எல்லோருமே இந்த அரங்கத்தில் மக்கள் முன் வீற்றிருக்கின்றார்கள்.

இன்றைய சூரியப்பொங்கல் விழா வெறும் களியாட்ட நிகழ்வு அல்ல.

சேவைகள் ஆற்றிக் கொண்டிருப்பவர்களும் சேவைகளை மேலும் பெறவேண்டிய எமது மக்களும் சந்தித்துக் கொள்ளும் நிகழ்வுதான் இந்த சூரியப்பொங்கல் தினம்.

உரிமைகளை வழங்க விருப்பங் கொண்டவர்களும், உரிமைகளைப் பெற வேண்டிய எமது மக்களும் சங்கமித்துக் கொள்ளும் நிகழ்வுதான் இந்த தேசிய பொங்கல் தினம்.

நாம் களியாட்டங்களை நடத்துவதற்கு இந்த நிகழ்வை ஒழுங்கு செய்திருக்கவில்லை. களியாட்டம் நடத்தும் சூழலும் இதுவல்ல.

எமது கிழக்கு வாழ் உறவுகள் இயற்கை அனர்த்தங்களால் அவலப்பட்டுக் கொண்டிருக்கும் இந்த துயரச்சூழலில் நாம் களியாட்டங்களை நடத்திக்கொண்டிருக்க முடியாது.

எமது தேசத்தில் வாழும் தனியொரு மனிதனுக்கு, வலிகள் வதைகள் அவலங்கள் நிகழுமேயானால் அந்த வலியும், வதையும், அவலமும் எமது இதயங்களிலும் வலியெடுக்கும் உணர்வுகளைக் கொண்டவர்கள் நாங்கள்.

1978இல் எமது கிழக்கு மாகாண மக்கள் இயற்கை அனர்த்தங்களால் அவலப்பட்டு துயரங்களை சுமந்து நின்றபோது நிவாரணப்பொருட்களை சேகரித்து கிழக்கு மக்களிடம் நேரடியாக முதலில் கொண்டு சென்று அந்த மக்களின் துயரங்களை துடைத்தவர்களில் நானும் ஒருவன்.

தற்போதும் கிழக்கு மக்களின் அவலங்களைக் கண்டு எமது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்கள் துரிதமான நிவாரணப்பணிகள் உரிய முறையில் நடக்க வேண்டும் என்று பணிப்புரை வழங்கியுள்ளார்.

நாமும் எமது கிழக்கு வாழ் உறவுகளின் அவலம் கண்டு துடி துடித்து அந்த மக்களுக்கான நிவாரணப்பணிகளில் ஈடுபட்டு வருகின்றோம். யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பொது அமைப்புகளும் ஈடுபட்டு வருகின்றன.

கிழக்கு மக்களின் துயர் துடைக்க உதவியுள்ள அனைவருக்கும் இந்த இடத்தில் நான் நன்றி தெரிவிக்கின்றேன்.

ஒரு புறம் இயற்கையின் அனர்த்தங்கள் நடந்து கொண்டிருப்பினும் மறு புறத்தில் ஏற்கனவே பல்வேறு அவலங்களையும் சந்தித்திருந்த உங்களுக்காகவே இன்றைய சூரியப்பொங்கல் நிகழ்வுகள் நடந்து கொண்டிருக்கின்றது.

இதில் கபட நோக்கம் இல்லை. சுயநலம் இல்லை. அரசியல் இல்லை. சூரியனுக்கு நன்றி தெரிவிக்கும் இன்றைய தினத்தில் அச்சமும் பதட்டமும் தருவனவாக இருந்த சூழலையும்,

எமது மக்கள் உரிமையின் பெயரால் நடத்தப்பட்ட அழிவுயுத்தத்தினாலும் சொந்த இனத்தவர்களாலும் சுரண்டப்பட்டும், ஒடுக்கப்பட்டும், கொல்லப்பட்டும், அச்சுறுத்தப்பட்டும் வாழ்ந்து வந்த துயரச்சூழலை இல்லாதொழித்து, எமது மக்களுக்கு ஆறுதல் தரமுடிந்த அமைதிச் சூழலை உருவாக்கி தந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களுக்கும் மற்றும் சகலருக்கும் நன்றி தெரிவிக்கும் நிகழ்வாகவே இதை நாம் கருதவேண்டும்.

நீண்ட கால இழப்புகளை சந்தித்திருந்த எமது மக்கள் அழிவுகளை மட்டுமன்றி வேறு எதையுமே பெற்றுத்தந்திராத அழிவு யுத்தத்தை முடிவிற்கு கொண்டுவந்த நடவடிக்கையின் போதும் அழிவுகளில் இருந்து மீண்டெழுந்து வந்திருக்கின்றார்கள்.

துயரங்கள் இனியில்லை, அவலங்கள் இங்கில்லை.. என்ற நிலைமையை தோற்றுவித்தமைக்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் நிகழ்வாகவே இதை நாம் கருதுகின்றோம்.

பெரும் புயலை எதிர் கொண்டு மீண்டெழுந்து வந்த எமது மக்கள் துயரங்களில் இருந்து விடுபட்டு ஒளிமயமான ஒரு எதிர் காலத்தை நோக்கிச் செல்லும் விருப்பங்களை வெளிப்படுத்தும் தினமாகவே இன்றைய சூரியப்பொங்கல் தினத்தை நாம் கருதுகின்றோம்.


இதுவரை அனுபவித்து வந்த வலிகள், வதைகள் அனைத்தையும் எடுத்துக்காட்டி அவற்றிலிருந்து மீள்வதற்கான வாய்ப்புகளையும், சந்தர்ப்பங்களையும் கடந்த கால தமிழ் தலைமைகள் தவற விட்டது போல், இனியும் நாம் தவறவிட அனுமதிக்க மாட்டோம் என்ற நம்பிக்கையோடு,

கிடைத்த சந்தர்ப்பத்தை நாம் உரிய முறையில் பாதுகாப்போம் என்பதற்கு எமது மக்கள் சமிக்ஞை காட்டும் தினமாகவே இன்றைய தேசியப்பொங்கல் தினத்தை நாம் கருதுகின்றோம்.

சகல வன்முறைகளும் ஒழிக்கப்பட்ட, இன்னமும் முழுமையாக ஜனநாயக மயப்படுத்தப்பட்ட ஒரு சமாதான பூமியிலேயே நாம் வாழ விரும்புகின்றோம் என்ற எண்ணங்களை வெளிப்படுத்த உரிமையோடு உறவுக்கரம் நீட்டுகின்ற நிகழ்வாகவே இன்றைய சூரியப்பொங்கலை நான் கருதுகின்றேன்.

இனங்களுக்கிடையிலான ஐக்கியத்தை பலப்படுத்தவும், பேணிப்பாதுகாக்கவும், சம உரிமை பெற்ற சுதந்திர பிரஜைகளாக எமது மக்கள் முகமுயர்த்தி கௌரவமாக வாழ்வதற்கும், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களுடனான உறவுகளை எமது மக்களும் பலப்படுத்துகின்ற உயரிய எண்ணங்களைக் கொண்ட நிகழ்வாகவே இந்த தேசிய பொங்கல் தினத்தை நான் கருதுகின்றேன்.

**(அமைச்சரின் மேற்படி உரையின் முழுமையான வடிவத்தை நாளை எமது பத்திரிகையில் எதிர்பாருங்கள்)**



# கனடாவை நோக்கி இரு கப்பல்கள் தமிழ் அகதிகளுடன் புறப்படத்தயாராகிறது

(ரெரன்றோ)

இலங்கையர்கள் 400 பேரை ஏற்றிக் கொண்டு கனடாவை நோக்கி மேலும் இரண்டு கப்பல்கள் விரைவில் பயணத்தை மேற்கொள்ளவுள்ளதாக கனடியபுலனாய்வு அதிகாரிகள் கனேடிய அரசாங்கத்திற்கு தெரிவித்துள்ளனர்.

வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்ட போரின் போது பல்வேறு நாடுகளுக்கும் தப்பிச் சென்றிருந்த பொதுமக்கள் மற்றும் புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் ஆகியோர் குறித்த கப்பல்களில் கனடாவை நோக்கிச் செல்ல உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்வேறு நாடுகளிலிருந்தும் இக்கப்பல் பயணத்துக்கான ஆட்கள் திரட்டப்பட்டு வருவதுடன், அவர்கள் தென்கிழக்காசிய நாடொன்றின் பிரதேசமொன்றில் ஒன்று சேர்க்கப்பட்டு வருவதாகவும் தகவல்கள் வெளிவந்துள்ளன.


இவர்கள் கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியக் கரைக்குச் சென்றடையத் திட்டம் இட்டுள்ளதாகவும், ஏற்கெனவே சிலர் கப்பல் ஏறும் இடத்திற்கு நகர்த்தப்பட்டுள்ளதாகவும் செய்திகள் குறிப்பிடுகின்றன.

ஆயினும், இவர்களை ஏற்றிச் செல்வதற்குப் பொருத்தமான கப்பல்கள் இதுவரை கிடைக்காத நிலையில், 200இலிருந்து 300 பேரை ஏற்றிச் செல்வதற்கான கப்பல்களை பெற்றுக் கொள்வதற்கான முயற்சிகளில் இப் பயண ஏற்பாட்டாளர்கள் தீவிரமாக இறங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இக் குறித்த பயணம் தொடர்பான விபரங்கள் புலனாய்வுத துறைக்கு தெரிந்திருந்தாலும், இப் பயணிகளின் உயிராபத்து கருதி கப்பல்களின் பயணங்கள் பெரும்பாலும் தடுக்கப்படப் போவதில்லை என கனேடிய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந் நிலையில், இக் கப்பல்கள் பெரும்பாலும் எதிர்வரும் மார்ச் மாதம் தங்கள் பயணத்தை ஆரம்பிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

# நோயாளியாகிறார் சரத்பொன்சேகா



முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகா நோய் எதிர்ப்பு சக்தி குறைபாட்டினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இதனால் அவரது தலைமுடி உதிர்வதுடன், சருமநோய் ஏற்பட்டுள்ளதாகவும் ஜனநாயகத் தேசிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

சில வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலின் காரணமாக சரத் பொன்சேகா பாதிப்படைந்ததாகவும் அவர் கூறினார்.

சிறைச்சாலை ஆணையாளர் வி.ஆர்.டி.சில்வாவிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, சரத் பொன்சேகாவிற்கு அவசியமாக சிகிச்சைகள் வழங்கப்பட்டதாக தெரிவித்தார்.

# பொதுச்சொத்துகளுக்கு சேதம் விளைவித்தாராம் அர்ஜுன ரணதுங்கவுக்கு பிடியாணை



ஜனநாயக தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான அர்ஜுன ரணதுங்கவை கைது செய்வதற்கான பிடியாணையை காலி பிரதம நீதிவான் தாமர தென்னகோன் நேற்று உத்தரவிட்டுள்ளார்.

இராணுவ நீதிமன்றத்தின் தீர்ப்புக்கமைய சிறை வைக்கப்பட்டுள்ள ஜனநாயக தேசிய கூட்டமைப்பின் தலைவர் சரத் பொன்சேகாவை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டமொன்றின் போது பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் அவர் உட்பட மேலும் சிலருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டிருந்தது.

இந்நிலையில் நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது அர்ஜுன ரணதுங்க மன்றில் ஆஜராகியிருக்கவில்லை. இதனையடுத்து அவருக்கு எதிராக நீதிவான் பிடியாணை பிறப்பித்தார்.

இருப்பினும் நாடாளுமன்ற உறுப்பினரான அர்ஜுன ரணதுங்க தற்போது வெளிநாடு சென்றிருப்பதாலேயே அவர் மன்றில் நேற்று சமூகமளிக்கவில்லை என்று அவர் சார்பில் மன்றில் ஆஜரான சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.

திட்டமிட்டபடி

# உள்ளூராட்சி தேர்தல் நடக்கும்; தேர்தல் செயலகம் அறிவிப்பு

ஜனாதிபதியின் அதிகாரத்தைப் பயன்படுத்தி மாத்திரமே உள்ளூராட்சி சபை தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல் செய்வதற்கான காலத்தை நீடிக்க முடியும் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

சீரற்ற காலநிலை காரணமாக வடக்கு, கிழக்கில் வெள்ளப் பாதிப்பு ஏற்பட்டுள்ளதால் வேட்பு மனுத்தாக்கல் செய்வதற்கான கால எல்லையை நீடிக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரதித் தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரியவுடன் பேச்சுவார்த்தை நடத்தியமை குறிப்பிடத்தக்கது. உள்ளூராட்சி சபைத் தேர்தல் வேட்பு மனுத்தாக்கல் செய்வதற்கான கால எல்லையை மாற்றியமைப்பதில் தேர்தல் சட்டத்தின் பிரகாரம் அதிகாரமில்லை. வேட்பு மனுத்தாக்கல் செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்ட திகதியிலேயே வேட்பு மனுத்தாக்கல் இடம்பெறும். ஜனாதிபதியின் அதிகாரத்தின் மூலம் மாத்திரமே இத்திகதியை மாற்ற முடியும் என பிரதித் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

### ஐ.நா. மனித உரிமை...

பிராக்கின் இலங்கைக்கான விஜயம் அமைவதாக ஐக்கிய நாடுகள் விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவரது விஜயத்தின்போது உதவி முகவர் நிலையங்கள், நன்கொடையாளர்கள், அரசாங்கப் பிரதிநிதிகளையும் சந்திப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இலங்கையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கான அவசர நிவாரண நிதியமொன்றும் கதரின் பிராக்கின் விஜயத்தையொட்டி ஆரம்பிக்கப்படவுள்ளது. பிரதி அவசரகால நிவாரண இணைப்பாளர் கதரின் பிராக்கின் இலங்கைக்கான முதலாவது விஜயம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

### இலங்கையின் இராணுவ...

இந்த ஆலோசனைக்கு அமையவே 2010 ஆகஸ்ட்டில் காலியில் இரண்டு நாள் மாநாடு இடம்பெற்றது.12க்கும் மேற்பட்ட சிரேஷ்ட கடற்படை அதிகாரிகள் இந்த மாநாட்டில் கலந்து கொண்டனர்.

அமெரிக்கா சார்பில் இதில் கலந்து கொண்ட அமெரிக்க கடற்படையின் பசுபிக் பிராந்திய கட்டளைப் பிரிவைச் சேர்ந்த பிரிகேடியர் ஜெனரல் ஸ்டேன்லி ஒஸர்மன் கடல் பாதுகாப்பு மற்றும் பயங்கரவாதத் தடுப்பு ஆகிய விடயங்களில் இலங்கையிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டியவை நிறைய உள்ளன என்று கூறினார்.

புலிகளின் கப்பல்களை கண்டுபிடிக்க உதவியது அமெரிக்க அவதானிப்பாளர்கள் தான் என்று இங்கு பதிலுக்குப் பேசிய கோத்தபாய தெரிவித்திருந்தார். உத்தியோகப்பூர்வமற்ற விதத்தில் இலங்கைக்கு அமெரிக்கா சில விடயங்களில் உதவியுள்ளது.

2008 இல் புலிகளின் ஏழு கப்பல்கள் இராணுவத் தளபாடங்களுடன் மூழ்கடிக்கப்பட்டமைக்கு அமெரிக்காவின் செய்மதிகளின் உதவியோடு பெற்றுக்கொள்ளப்பட்ட படங்கள் பெரும் உதவியாக இருந்துள்ளன என்று ஜோன் லீ எண்டர்ஸன் தனது கட்டுரையில் தெரிவித்துள்ளார்.

'புலிகளின் மரணம்' (Death of the tiger) என்ற தலைப்பில் அவர் எழுதியுள்ள கட்டுரையிலேயே இந்தத் தகவல்களைத் தெரிவித்துள்ளார்.தமிழ் பிரிவினைவாதத்துக்கு எதிராக இலங்கை அரசுக்குக் கிடைத்த மாபெரும் வெற்றி என்றும், நவீன யுத்தகலையின் வெற்றிக்கு இலங்கையை ஒரு உதாரணமாக எடுத்துக்கொள்ளலாம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

### குறுகிய அரசியல்...

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அழைப்பின் பேரில் தேசியப் பொங்கல் விழாவுக்கு ஜனாதிபதி வருகை தந்திருந்தார்.

இவ்விழாவில் ஜனாதிபதி பேச ஆரம்பித்தபோது மழைத்தூறல்கள் சொட்டுசொட்டாக விழ ஆரம்பித்தது. தொடர்ந்து அவரது பேச்சுக்கு இடையூறு அளிக்காது மழை ஓடி ஒளிந்துவிட்டது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அங்கு தொடர்ந்து தமிழில் பேசுகையில் கூறியதாவது,

தற்போதைய வடக்கின் வசந்தம் தமிழ்மக்களுக்கானதும் அவர்களது பிள்ளைகளுக்குமான வசந்தமாகும். இந்த வசந்தத்தையும், அபிவிருத்தியை யும் சிலர் குழப்ப முயற்சிக்கிறார்கள். இவர்களது முயற்சிகளுக்கு நாம் ஒருபோதும் இடமளிக்க மாட்டோம்.

பாதாள உலகக் கோஷ்டிகளும், மாபியா குழுக்களும் தென்பகுதியில் இருந்தால் என்ன, வட பகுதியில் இருந்தால் என்ன அவற்றை இந்நாட்டிலிருந்து இல்லாது ஒழிப்பதுடன் மீண்டும் ஒரு பயங்கரவாதம் ஏற்பட இடமளிக்க மாட்டேன்.

இன்று நாட்டுக்குத் தேவை அபிவிருத்தி ஒன்றேயாகும். இந்த அபிவிருத்திப் பணியில் அரசாங்கம் வடக்கிற்கென்றோ கிழக்கிற்கென்றோ தெற்கிற்கென்றோ பேதம் பாகுபாடு காட்டாது நம் நாட்டை அபிவிருத்தி செய்வதில் ஈடுபட்டு வருகிறோம்.

நாம் செய்துவரும் அபிவிருத்திப் பணிகளைப் பற்றி விமர்சனம் செய்பவர்கள் அபிவிருத்திகள் அனைத்தையும் வெளிநாட்டு உதவிகளுடனேயே செய்து வருகிறோம் என்று கூறுகிறார்கள். நாம் வெளிநாடுகளில் கடன்பட்டு செய்தாலும் அக்கடனுக்கு வட்டியையும் சேர்த்துத்தான் வழங்குகிறோம். இதை அவர்கள் உணரவில்லை.

நாட்டிலுள்ள அரசியல் கட்சிகள் அவை தமிழ் கட்சிகளாக இருந்தால் என்ன? சிங்களக் கட்சிகளாக இருந்தால் என்ன குறுகிய அரசியல் லாபம் பெறும் நோக்கில் நாட்டு மக்களை இனரீதியாகப் பிரித்து செயற்படும் முறையை அவர்கள் கைவிடவேண்டும். நாம் பிரிந்து செல்லும் நாட்டைப் பார்க்கவில்லை. ஒன்றுபட்ட நாட்டையே பார்க்கவேண்டும்.

30 வருடங்களாகப் பின்னோக்கிச் சென்ற வட் பகுதியின் பயணத்தை இப்பொழுது அபிவிருத்திப் பாதையில் எமது பயணத்தில் முன்னோக்கிச் சென்று வருகிறோம்.

பிரிந்து நின்றோ, தனித்தனியாக நின்றோ எவரும் வாழமுடியாது. சிங்கள மக்களாயினும் சரி, தமிழ் மக்களாயினும் சரி, முஸ்லிம் மக்களாயினும் சரி, பறங்கி மக்களாயினும் சரி, யாராக இருந்தாலும் அவர்கள் எல்லோரும் ஒரு தாயின் மக்களே என்பதை உணரவேண்டும்.

இந்நாட்டில் இனபேதத்தையும், குலபேதத்தையும், மதபேதத்தையும் தூண்டிவிடாது எல்லா மக்களையும் ஒன்று சேர்ந்து வாழக்கூடிய சூழ்நிலையைக் கொண்டுவருவதுதான் எல்லா அரசியல் கட்சிகளினதும் முக்கியமான பொறுப்பாக இருக்கவேண்டும்.

குறுகிய அரசியல் இலாபம் பெறும் நோக்கில் மக்களை இனரீதியாகவும், மதரீதியாகவும் பிரித்து செயற்படக்கூடிய முறை இல்லாதொழிந்து போகவேண்டும் என்று இத் தைத்திருநாளில் நான் கூறிவைக்க விரும்புகிறேன்.

இங்கு மேடையில் இருக்கின்ற எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றுபட்டு ஒருமித்த குரலில் தமது தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு அனைவரும் செயற்பட முன்வாருங்கள் என்று அழைப்பு விடுத்தார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைப் பொறுத்த மட்டில் உங்களுக்கென்று இருக்கக்கூடிய ஒரே ஒரு அமைச்சர் அவர்தான். ஆனால் அவர் உங்களுக்கு மட்டும்தான் அமைச்சர் என்று நீங்கள் எண்ணிவிட கூடாது. அவர் இந்நாடு முழுமைக்கும் அமைச்சர் என்பதை நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும்.

தமிழ் மக்களின் பாரம்பரி கலை கலாசார நிகழ்வுடன் என்னை வரவேற்ற மாணவிகளின் நடனத்தைப் பார்த்தபோது அக்கலையின் மகத்துவத்தை என்னால் உணரமுடிந்தது.

தை பிறந்தால் வழி பிறக்கும் என்பார்கள். இத் தைத்திருநாளில் மக்கள் மத்தியில் நம்பிக்கை நிலையாக இருக்கவேண்டும். சமாதானம் சகவாழ்வு, சமத்துவம், சௌபாக்கியம் எல்லாம் மலரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு இத்தேசியப் பொங்கல் விழாவை ஏற்பாடு செய்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை நான் பாராட்டுகின்றேன் என்று கூறினார்.

இவ்விழாவில் அந்தணப் பெருமக்கள், கலைஞர்கள், மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர் கள், பேராசிரியர்கள், திணைக்கள உயரதிகாரிகள், விவசாயிகள், பொதுமக்கள் எனப் பல்லாயிரக் கணக்கில் திரண்டிருந்தனர்.

### கொலையாளியின்...

வந்த இனந்தெரியாத இருவர் காலில் சுட்டுவிட்டு தப்பி சென்றுள்ளனர்.சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை யாழ். மானிப்பாய் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

யாழ்.மாவட்ட மக்களுக்கு
SEC
ஷாலோம்
SHALOM
வழங்கும் நற்செய்தி...!
உங்கள் கனவு இல்லங்களையும் ஏனைய கட்டிடங்களையும் மாவட்டத்தின் எந்தப் பகுதியிலும் அழகுற நிர்மாணித்துக்கொள்ள SHALOM நிர்மாணப் பொறியியலாளர்கள் உறுதியான உத்தரவாதமளிக்கிறார்கள்.
குறித்த தவணைக்குள் .... குறைந்த செலவில்.... நவீன முறையில்...
வீடுகள்-கட்டிடங்கள் அனைத்தையும் அமைத்துக்கொள்ளவும் மாபிள் - ரெறாசோ வேலைகளை நேர்த்தியாக அழகுற செய்துகொள்ளவும் நம்பிக்கையுடன் தொடர்பு கொள்ளுங்கள்
SHALOM
20/1, 2வது ஒழுங்கை,
பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.
(C/357)
தொலைபேசி : 0217901798 - 0771044861
தீவகத்தில்
SHALOM,
சிற்பன வீதி,
வங்களாவடி,
வேலணை.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 ஜனவரி 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.